தனிப்பிரதி விலை { உள் நாடு 1½ அணா / வெளிநாடு 1½ அணா

KUDI ARASU.

Reg. No. M. 2041

குடி அரசு

உள்நாட்டு சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1–12
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி,

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு சுக்கில ஆண்டு வைகாசி மீ 6உ. (19—5—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 3

வருஷ சந்தா எட்டே (0—8—0) அணா.

முந்துங்கள்! முந்துங்கள்!

"பகுத்தறிவு."

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் "பகுத்தறிவு" என்பதாகப் பெயர்கொண்ட மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களுக்குபகுத்தறிவைவளரச்செய்வதற்காகவேயாகும். எல்லாவற்றையும்விடமனிதனுக்குப்பகுத்தறிவே பிரதானமானது என்கின்ற தத்துவமே அதன் முக்கிய கொள்கையாய் இருக்கும். அதை அனுசரித்து 'சித்திரபுத்திர'னின் கட்டுரைகளும் வேடிக்கை சம்பாஷணைகளும் அதில் வரும், அன்றியும் தமிழ் நாட்டில்உள்ள பகுத்தறிவில் சிறந்த பல பெரியோர்கள் முறையாக கட்டுரைகள் எழுதி உதவுவதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு 0—8—0 எட்டே அணா.

சந்தாதாரராக இஷ்டமுள்ளவர்கள் உடனே ஸ்டாம்போ மணியார்டரோ அனுப்புங்கள்.

விலாசம்:—

"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

(f)

புத்தகம் 1-க்கு



இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

Mysteries of Wedded Life.

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும்கிடைக்கும்

வாஸன் புஸ்தக சாலை,
244, தாங்கசாலைவீதி. சென்னை.

விலை ரூ. 2—0—0

(4-a)

மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும் பரமானந்த சுருசுருப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சொற்பம். 43 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்நானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய ... பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, லைசனு பஜார், மதராஸ்.

(10)

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். கெட்டுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

(4-b)

தங்க மேடல்கள் பெற்ற

மலையாள நாட்டுத் துணிகள்.

இரணியல் சேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் செலவு செய்து ஆர்டருக்கு அனுப்பபடும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
Travancore.

(1)

முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கியஜெர்மன்பெட்டி.

சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டைசாட்டுபொத்தான்கள் செட் 12; டை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின்1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாக்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான் ஸபர்படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி
தபால்பெட்டி 119 மதராஸ்.

(4-c)

குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

"ஆனந்தபோதினி"

ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலநடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பேரும்புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறநும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கோட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

உங்களுக்கு என்ன வேண்டும்?

மத உண்மைகளா?	கிராமச் சீர்திருத்தங்களா?
தத்துவ ஆராய்ச்சிகளா?	சமூக இயல்களா?
கைத்தொழில் விளக்கங்களா?	வைத்திய விசேஷங்களா?
வியாபார ரகசியங்களா?	தேசீய தத்துவங்களா?
விஞ்ஞான (Science) விநோதங்களா?	சிறுகதைப் பகுதிகளா?
	இன்னிசைப் பாட்டுக்களா?

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.

உள்நாடு வருடசந்தா ரூ. 3, 6 மாத சந்தா ரூ. 1-12-0.
பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு வருட சந்தா ரூபா 4.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
தபாற்பெட்டி நெ. 167, மதராஸ்.

Souriya

சகோதரிகளே!

எனக்கு 39 வருடங்கள் வரையில் புத்ரபாக்கியமில்லாமல் சதா அவஸ்தைப்பட்டு வந்த சூதக வியாதியானது "சௌரியா" என்னும் சஞ்சீவியால் குணப்பட்டதுடன் தற்போது புத்ர பாக்கியமடைந்த சந்தோஷத்தை என்னைப் போன்ற சகோதரிகளுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

சுந்தராம்பாள்.

"சௌரியா"

ஆயிரக்கணக்கான பெண்மணிகள் எங்களின் வரப்பிரசாதமான

'சௌரியாவை'

சாப்பிட்டு ருதுசூலை, சூதக வலி, (மாதவிடாய் காலத்தில் ஏற்படும் சகல விதமான வியாதிகள்) முதலிய வியாதியினின்றும் நீங்கி ஆரோக்கியவதிகளாய் புத்திர பாக்கியத்தையும் லக்ஷ்மி கடாக்ஷத்தையும் பெற்று சம்பன்னராய் வாழ்கின்றனர்.

விபரமான கேட்லாக் இனாம்.

புட்டி 1 க்கு ரூபாய் 3—0—0.

பாக்கிங் தபால் செலவு வே

சங்கர ராம் மெடிகல் ஹால்,
சேலம்

(15)

ஆங்கிலம் கற்ற பெண் தேவை.

பிராமணரல்லாத 25 வயதுள்ள ஒரு ஹிந்து (Cast Hindu) வாலிபரை மணம் செய்து கொள்ள வருணாஸ்ரம அதர்மத்தை ஒழித்த ஓர் ஹிந்து பெண் தேவை.

(1) மணமகன் சென்னை சர்வகலாசாலையில் (Madras University) ஆங்கிலபாஷை ஆராய்ச்சியிலும் இலக்கியத்திலும் எம். ஏ. பட்டமும் (M. A. Honours in Language & Literature) சன்னதும் பெற்றவர். தமிழ் செம்மையாய் தெரியும். வடமொழி (சமஸ்கிருதம்) இண்டர் மீடியேட் (எப். ஏ.) வரையிலும் வாசித்து அதன் பரீக்ஷையில் தேர்ச்சிபெற்றிருக்கிறார். ரிவினியூ டிபார்ட் மெண்டில் பப்ளிக் சர்வீஸ் கமிஷனின்படி செலக்ஷன் செய்யப்பட்டு ஒரு ஆபீசர் கிரேடில் இப்போதுதான் காயம் செய்யப்பட்டிருக்கிறார். கிரிமினல் ஜுடிஷியல் டெக்ஸ்டு உட்பட ரிவினியூ டிபார்மெண்டுக்கு வேண்டிய சகல டெக்ஸ்டுகளிலும் தேர்ந்திருக்கிறார். அதிசமீபத்தில் டிப்டி தாசில்தாராக எதிர்பார்க்கப்படுவதுடன் காலக்கிரமத்தில் அதிக நாள் படாமல் டிப்டி கலெக்டர் ஸ்தானத்தைப் பெற தேவையுள்ள விசேஷ வாசிப்பும் வேலைத்திறமை முதலிய யோக்கியதாம்சங்களும் எல்லாம் இருப்பதுடன் போதுமான தருணமும் பெற்று இருக்கிறார்.

(2.) விருப்பமுள்ள மணமகள் 16க்குகீழ்ப்படாமலும், 20வயதுக்கு உட்பட்டும் இருக்கவேண்டும். திடசரீரமும் ரூபலாவண்யமும் அன்பும் பொருந்தி இருக்கவேண்டும். குடும்ப சிக்கனமும் இந்தியமாதர்களுக்கு இன்றி அமையாத, குடும்ப மனேஜ்மெண்டை பொறுப்புடன் வகிக்கும் திறமையும் வாய்ந்திருக்க வேண்டியதுடன், இங்கிலீஷில் உத்தியோகப் போட்டிக்கு வேண்டிய அளவுக்கு பரீக்ஷையில் தேர்ச்சியில்லாவிட்டாலும், உலக காரியங்களுக்கும் வாழ்க்கைத்துணைக்கும் தன் கணவனுக்கு கற்புள்ள காதலியாய் இருக்கவேண்டும் போதுமான நிறைந்த இங்கிலீஷ் வாசிப்புஇருக்கிறதா என்பதை முக்கியமாய்க் கவனிக்கப்படும். சங்கீதத்தில் அதிக விற்பத்தி இல்லாவிட்டாலும் சாமானிய பயிற்சியும் ஞானமும் கருவிகள் மூலமாவது வாயாலாவது பாடக்கூடிய ஞானமும் இருந்தால் நலமாயிருக்குமென்று விரும்பப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு கவரில் எழுதவும்.

கவனிப்பு:—

(1) வரும் கடிதங்கள் பிறர் பார்வைக்கு வெளிப்படாமல் காப்பாற்றி வைக்கப்படும்.

(2) இதில் கண்ட கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் பூர்த்தியான பதிலில்லாமல் எழுதும் கடிதங்களுக்கும் அநாவசியமான கேள்விகளுக்கும் பதில் கிடைக்காது.

(3) அவசியமுள்ள விபரங்கள் தேவையானால் பின் விவரமாய் எழுதப்படும்.

சீர்திருத்தப்பிரியன்
C/o
மானேஜர் "குடி அரசு"
ஈரோடு.

ராம ராஜ்யம்.

கைவல்லியம் எழுதுவது

திரு. கோ. வடிவேல் செட்டியார் அவர்கள் ராயபுரம் கண்ணபிரான் பக்த ஜன சபையில் செய்த பிரசங்கத்திலும் திரு. கலியாண சுந்தர முதலியார் பிரசங்கம் செய்யும் எல்லாச் சபைகளிலும், சுயமரியாதைக்காரர்கள் இராமாயணத்தைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்றும், பொய்யென்கிறார்களென்றும், நாஸ்திகப் பிரசாரம் செய்கிறார்கள் என்றும் சொல்லி வருவதோடு இந்த அறிவிலிகளை என்ன செய்யப் போகிறீர்கள்? என்றும் கேட்கிறார்கள்.

ஆழ்ந்த கருத்தைக் கொண்டு முன் ஜாக்கிரதையினால் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளுவதற்குப் பார்ப்பனர்கள் நம்மவர்களிலேயே சிலர் மூலமாகத் தங்கள் கொள்கைகளை நமது நாட்டில் காவிய மூலயமாகப் பரப்பினார்கள் என்கின்ற ஒரே விஷயத்திலேயே அல்லாமல் மற்றபடி அக்காவியத்திலுள்ள ஓவியத்திலும் கம்ப ராமாயணத்தின் கவித்திறத்திலும் கற்பனைத் திறத்திலும் எங்கள் விவகாரமில்லை.

எனவே அவ்வித விவகாரத்திற்குத் தக்க பதில் சொல்லாமல், கவித்திறத்தையும் கற்பனையையும் எடுத்துக்காட்டி எங்களைக் குற்றம் சொல்லி அறிவிலிகளென்று சொல்லி விட்டாலும் நாங்கள் சொல்லுவது புஸ்தகங்களிலிருக்கிறதா? இல்லையா? அது சரியான கேள்வியா? தப்பான கேள்வியா? நாங்கள் இராமாயணத்தைக் குற்றம்சொல்லுவதற்கு அதில் ஆதாரமிருக்கிறதா? இல்லையா? அல்லது எங்களை அறிவிலிகளென்று சொன்னதே நியாயமா? என்ற விஷயங்களை உலகம் தெரிந்து கொள்ள ஆசைப்படாதா? என்பதை அறிவுடைய பண்டிதர்களான கோ. வடிவேல் செட்டியார் அவர்களும் திரு.வி.க.முதலியார் அவர்களும் உலகத்திற்கு எடுத்துக் காட்டப் படாதோ? இது படித்தவர்கள் என்று சொல்லிக் கொண்டும் சமய சாஸ்திர ஆராய்ச்சியுடையவர்களென்று நினைத்துக் கொண்டுமிருக்கும் இவர்கள் புத்தியின் கடமையுமாகும்.

அவர்கள் கடமையை விட்டு விட்டுச் "சீதையைக்குற்றம் சொல்லுகிறார்கள், ராமாயணத்தைத் தப்பென்கிறார்கள் இந்த அறிவிலிகளை நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்" என்று சொல்லும் இந்தப் பண்டிதர்களுக்கு ராமாயணக் கதை தெரிந்திருக்க வேண்டுமே? தெரிந்துபக்தியினால் அவ்விதம் சொல்லுகிறார்களா? அப்படியிருக்க நியாயத்தைக் காணோம். ஒருவர் திருக்குறளுக்கு உரையாசிரியர், வேதாந்தி. மற்றவர் இயற்கையழகென்றும் ஓவியமென்றும் இஷ்டம்போல பேசும் சைவ சமயத்தவர். இப்படி இருந்தும் இதே வேலையாக இருப்பதற்குக் காரணமென்ன? திரு. கலியாணசுந்தர முதலியார் வேண்டுமானால் எலக்ஷன் வருகையில் காங்கிரஸ் 'வாதியாகிப் பார்ப்பாருக்குப் பக்கத்துணையாயிருந்தே தீர வேண்டும். திரு.கோ. வடிவேல்செட்டியார் எங்களால் எந்த வேதாந்த மதம் கெட்டுப்போகுமென்று நினைத்து இந்த உத்தியோகத்திற்கு வந்தாரோ தெரியாது.

எப்படி இருந்தாலும் புஸ்தகங்களிருக்கின்றன, உலகமிருக்கிறது, ஆலோசித்துப்பார்க்கும் சனங்களிருக்கிறார்கள். அதனுண்மை தெரிந்த பண்டிதர்களுமுண்டு. கம்பர் தான் பார்ப்பாரிடம் ஆலோசித்துத் தினம் எழுநூறு கவி பாடினதாக அவரே சொல்லுகிறார். பார்ப்பானிடம் ஆலோசித்துக் கம்பராமாயணம் பாடினால் அந்தக் கதை பார்ப்பான் பக்கம் சேராமல் எப்படியிருக்கும். "அபிவிருத்திக்கு எப்பொழுதும் எதிரிடையாயிருக்கிற புரோகிதர்களை வெறுத்துத் தள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் ஒருபொழுதும் சீர்படமாட்டார்கள். அவர்களுடைய இருதயங்கள் ஒருபொழுதும் விசாலமாகா. அவர்கள் நூற்றுக்கணக்கான வருஷங்களாயுள்ள மூடக்கொள்கை கொடுமை இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள்" என்று சுவாமி விவேகானந்தரே சொல்லியிருக்கிறார். இப்பேர்ப்பட்ட கொள்கையுடையவர்களுடன் கூடி ஆலோசித்து கம்பராமாயணமெழுதினால் அதனுண்மை எப்படியிருக்கும்?

திரு. கலியாணசுந்திர முதலியார் நியாய வழியாக அறப்போர் செய்யலாம் என்று கருங்கல்பாளையம் பிரசங்கத்தில் சொன்னதாகச் சித்திரை 28-ம் தேதி வெள்ளிக்கிழமை 'சுதேசமித்திரனி' லிருக்கிறது. நியாயவழி அறப்போரைப் பற்றி அவரைக் கேட்டும் அவர் சொல்லவில்லை, இதுவரையிலும் நான் எழுதின இராமாயணம் நியாய அறவழியல்லவென்று அவர் தள்ளிவிட்டாலும் இந்த வியாசத்தில் ஒரு கதை எழுதுகிறேன். இது அவர் நினைத்துக் கொண்டிருக்கும் நியாய அறவழியின் பட்டியலில் சேரும் சேராதென்பதை அவர் தெரியப்படுத்தட்டும்.

சம்புகன் என்னும் "சூத்திரன்" தவம் செய்யவும் அதனால் ஒரு பிராமணன் சாகவும் அப்பிராமணனின் சுற்றத்தார் இராமரிடம் போய் ஏ இராமா! உனது ராஜ்யத்தில் பெரும் அக்கிரமம் நடந்துவிட்டது. அதனால் ஒரு பிராமணன் செத்துவிட்டான் என்று சொல்லவும், உடனே ராமர் அந்த அக்கிரமத்தை விசாரிக்கவும், நாரதர் வந்து சோவும், 'சூத்திரன்' என்னும் சம்புகன் தவம் செய்ததினால் பிராமணன் இறந்து போய்விட்டான் என்று தெரிந்து சம்புகன் என்னும் 'சூத்திரனை' தன் வாளால்வெட்டி அவன் தலையை வீழ்த்தவும் உடனே செத்துப்போன பிராமணன் உயிர் பெற்று எழுந்தான். உடனே தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். பிராமணர்கள் ஆசீர்வதித்தார்கள் என்றும் கதை இராவாயணத்திலிருக்கிறது.

ஒரு ஜாதியான் தவம் செய்தால் இன்னொரு ஜாதியான் சாவதும் தவம் பண்ணினவனின் தலையை வெட்டினால் செத்தவன் பிழைப்பதுமான நீதி சாதாரண அறிவுக்குக்கூட ஒத்துவருகிறதா? இது சமயத்திற்கோ, மதப் பெரியவர்களுக்கோ, சுயமரியாதைக்காரர்களை அறிவிலிகள் என்று சொல்லும் அறிவுடைய பண்டிதர்களுக்கோ இது நீதிதானா? இராமரை எந்தவிதமாகப் பிரபலப்படுத்துகிறார்களோ அந்தப் பிரபலத்திற்கு இந்த நீதியைப் பொருத்திப் பார்த்தால் ராமனுடைய தெய்வத்தன்மையைத் தென்னாட்டில் விளக்கினது எதற்காகவென்பது தெரியாதா? செத்தவனைப் பிழைக்கச் செய்வது கடவுளால் ஆகலாம். கடவுளை அடைய தவம் செய்கிறவன் தலையை வெட்டுவது கடவுள் நீதிக்கு நியாயமா? சாதாரண மனிதராஜாவின் நீதியில் அங்கீகரிக்காத இந்த நியாயம் விஷ்ணுவின் நேர் அவதாரமாய் உலகத்தில் மனிதர்களுக்கு நடந்து காட்ட வந்ததென்று சொல்லப்படும் இராம அவதாரம் அவர் ராஜ்யபாரத்தில் எப்படிப்பொருந்தும்?

"சூத்திரன்" வேதம் வாசித்தால் அவன் நாக்கை அறுக்கவேண்டும், கேட்டால் ஈயத்தைக் காய்ச்சி அவன் காதில் ஊற்றவேண்டுமென்று விதித்த தரும சாஸ்திரங்களை நிலை நிறுத்தவும் "சூத்திரன் தவம் செய்ததினால் அவன் தலை இராமரே வெட்டினார் என்பதினால் பார்ப்பானுக்கு எல்லாரும் பணிவிடை செய்வதே தருமமென்றும் அந்த தருமத்தை நிலை நிறுத்தவே கடவுள் ராமனாக வந்து காட்டினாரென்றும் சொல்லி மற்றவர்களை என்றும் அடிமைகளாக வைத்திருக்க எழுதப்பட்டதே இராமாயணக்கதை" என்றுசொல்லுவதற்கு இந்தக் கதை ஒன்றே போதாதா?

கடவுள் பாதத்தை அடையும் வழியான நல்ல வழியை அடையத் தவம் செய்கிறவன் தலையை வெட்டி, பாடில்லாமல் தினமும் ஒன்றரை வயிறு உண்டு செத்த பார்ப்பானைப் பிழைப்பித்தார் என்றால் அந்த இராமநீதியும் அவர் கடவுள் தன்மையும் எத்தனை நியாயமானதென்பதை ஆலோசித்துப்பாருங்கள். இறந்துபோன பார்ப்பானும் உத்தம பிராமணனாகவே இருந்ததாக வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுதும் தவம் செய்கிற மற்ற ஜாதிக்காரனை வெட்டுவதென்பது என்ன நீதி? இராமரைக்கடவுள் என்னும் பார்வையிலேயே பார்ப்பவர்கள் சம்புகனின் கதை இராமாயணத்தில் எழுதப்படுவதற்குள்ள காரணத்தையும் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

பார்ப்பான் மூலமாக "சூத்திரன்" பரலோகத்தை நினைப்பதுதான் நியாயமென்றும் இல்லையேல் அவன் தலை வெட்டப்படுமென்றும் சட்டம் சம்புகன் கதையினால் ராமராஜ்யத்தில் ஏற்பட்டுப் போயிற்றென்பது நிர்மாணம்தானே? இவை கடவுள் நீதியென்றும் சாஸ்திர சம்மதமென்றும் பெரியவர்கள் சொன்னதென்றும் தானே அநேக காலமாக நமதுலகம் நம்பிக்கொண்டிருக்கிறது. வருணாசிரமமகாநாட்டுப் பார்ப்பார் தீர்மானப்படி திரு. கோ. வடிவேல்செட்டியரர் அவர்களும் "சூத்திரன்"தானே? இவர் ராமமந்திரம் ஜெபித்து பிராணாயாமம் செய்தால் இராமராஜ்ய சட்டப்பிரகாரம் இவர் குற்றவாளிதானே. ஏதாவதொரு பார்ப்பானும் செத்திருக்கவேண்டும். இந்தவிதமாக தந்திரக்கொடுமைகள் வெள்ளைக்கார ராஜ்யத்தில் இல்லை.

சம்புகன் என்னும் "சூத்திரன்" கதையைப் பார்ப்பான் இராமாயணத்தில் காட்டி நமது மடராஜாக்களால் எத்தனை தலைகள் வெட்டப்பட்டிருக்கும்? தலை போய்விடுமே என்கிற பயத்தால் பார்ப்பான் வலை தவிர வேறு ஒரு நல்ல வழியிலும் மனதைச் செலுத்தப் பயந்து அடிமை வாழ்வே நமதுநாட்டு ஆஸ்தியென்று இன்னும் காடு நினைத்துக் கொண்டிருக்கிறதே. திருவனந்தபுரம் முதலிய இன்னும் சில சுதேச ராஜ்யங்கள் வெள்ளைக்காரர்களின் மேற்பார்வையிலிருக்கையிலேயே அதன்கொடுமைகள் அநேகம் பிரத்தியக்ஷத்திலிருக்கின்றன.

இந்தச் சம்புகன் கதை இடைச்செருகலாகப் பின்னால் இராமாயணத்தில் சேர்க்கப்பட்டதென்று பல பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் வேண்டுமென்றே சொல்லுகிறார்களோ அல்லது ஆலோசனையில்லாமல் சொல்லுகிறார்களோ அல்லது இதைப்பற்றி அவர்கள் படிக்கவே இல்லையோ நமக்குத் தெரியாது. மட்டச்சரக்கைக் கலந்து விற்கும் வியாபாரியிடம் வியாபார நம்பிக்கையோடு செய்கிறவன் அதன் புரட்டைக் கண்டுபிடித்துவிட்டால் அவை கணக்குப்பிள்ளையின் குற்றம் ஆள்காரனின் அஜாக்ரதை என்று சொல்லுவது வழக்கம்தானே? இதுவரையிலும் அந்தப் புரட்டால் வந்த லாபமும் பெரிய வியாபாரி என்னும் பெயரும் நம்பிக்கையோடு வியாபாரம் செய்யும் பற்று வரவுக்காரர்களை மோசம் செய்ய இன்னும் உதவியாகவேயிருக்கிறது. கண்டுபிடித்தால்--கணக்குப்பிள்ளை குற்றம் எடுத்துக்காட்டினால் ஆளின் அஜாக்கிரதை கண்டுபிடிக்காதவரையிலும் தனக்கு லாபம் என்னும் ஏமாற்று வியாபார தோரணையால் கடவுளைக்காட்டி மோசம் செய்வதற்காக வந்த காவியங்களையும் சாஸ்திரங்களையும் குற்றம் சொன்னால், சொன்னது சரி அல்லது இல்லை என்று அதற்குத் தகுந்த காரணம் சொல்லுவது யோக்கியமான பண்டிதத் திறமையும் படிப்பின் தன்மையுமாகும்.

ஆரிய கொள்கைகளை தமிழ் நாட்டில் பரப்பி பிராமணன் பெரியவனென்றும் மற்றவன் கீழ

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

இதிகாசங்கள்.

—ஶ—

இராமாயணம்-ஆரண்ய காண்டம்

2-ம் கட்டுரைத் தொடர்ச்சி

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்.)

வால்மீகி கூற்றுக்கு மாறாகக் கம்பர் சடாயு பிரிந்த பின்னரே இராமனாதியர் கோதாவரியை அடைந்து பஞ்சவடி குறுகிக் குடிசை கட்டியிருந்தனரெனக் கூறுகிறார். அவர்கள் சூர்ப்பனகையைக் கண்ட அன்று நீராடச் சென்றதையும், இலக்குவன் கைகேசியை இகழ்ந்ததையும், பரதனை இராமன் புகழ்ந்ததையும் அவர் கூறுதுவிடுத்தார். கம்பர் சூர்ப்பனகையினுடைய பேரழகை மிக விரிவாக வாய்குளிரப் பாடுகிறார். சூர்ப்பனகை தோன்றி இராமனை யாரென வினவியதாகவும் அதற்கு அவன் தன் வரலாறு கூறி அவளை யாரென வினவியதாகவும் வால்மீகி கூற கம்பர் இராமனைக்கண்டு நாணி நின்ற அவளை நோக்கி நீ யாரென வினவ அவள் தன் வரலாறு கூறினளெனக் கூறுகிறார்.

இங்கே அறிஞரை ஒன்று சிந்திக்க வேண்டுகின்றோம். தனது அழகற்ற அரக்க உருவுடன் சென்றால் இராமன் விரும்பானெனத் தன் உரு மாற்றி அழகிய உருவுடன் சென்ற அறிவாளியாகிய சூர்ப்பனகை தன்னை யாரெனக்கேட்டபோது இராவணன்தங்கையென்று கூறினதாகக் கதை வருகிறது. இது இயற்கைக்கு மாறாக உள்ளது. வேறு ஆரியப் பெயர் எதனையேனும் சாற்றி அதனை ஏமாற்ற அவள் துணிந்திருப்பாளே ஒழிய தனது உண்மை வரலாற்றை அவள் கூறியிராள். இராவணன் தங்கையென்று கூறினால் இராமன் பயந்து தன்னைக் கூடுவன் என நம்பி அவள் கூறியிருப்பளோ என்னின் அதுவும் இயற்கைக்கு மாறேயாம். இராவணேச்வரன் தன் தங்கையைக் கற்பழித்த உண்மை உணருமேல் கொல்வனெனவே அஞ்சி இராமன் தனைக் கூடானென அறிந்து அவள் அறிவாளியாகையால் உண்மையைக் கூறியிராள். ஆதலின் சூர்ப்பனகையைப்பற்றிய இக்கதையெல்லாம் வேண்டுமென்று தமிழ் மக்களை இழிவுபடுத்த ஆரியர் கட்டிய கதையேயாகும். நிற்க

வால்மீகி கூறுவதெல்லாம் தன்னிடம் வந்த சூர்ப்பனகையை இராமன் தன்தம்பியிடம் பொய் கூறி அனுப்பினதும், இலக்குவன் சீதையை இகழ்ந்து அவளைத் திரும்பவும் இராமனிடம் அனுப்பினதும், அவள் சீதையைத் தாக்கச்சென்றபோது இராமன் அவளை உருக்குலைக்குமாறு தம்பியை ஏவினதும், அவன் அச்சட்டளைப்படி அவளுடைய காதுகளையும் மூக்கையும் அறுத்ததுமேயாம். இதனால் இராமன் மிக்க கொடும்பாதகனாகின்றனன்; பொய்யனுமாகின்றனன். இவ்வுண்மைகளை மறைத்து கதையை வேறு விதமாக எழுதினாலே இராமனை நல்லவனைப்போல தமிழுலகிற்குக்காட்டி அவர்களை ஏமாற்றலாம். ஆதலால் இக்கதையைப் பின் வருமாறு மாற்றி எழுதினார் கம்பர். இவைகளையெல்லாம் அறிஞர் சிந்தித்து உண்மையுணருமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

இராமன் சூர்ப்பனகை இராவணனுடைய தங்கை என்பதைக்கேட்டு "இராவணன் தங்கையாகிய நீ இவ்வழகிய உருவேனு? மேலும் துணையின்றி யின் வர வந்தாய்? என்று வினவினன். அவள் எவர்க்கும் தீயவர்களாகிய இராவணாதியரை வெறுத்துத் தாத்தன்னி நல்லுநற்பெற்று ஆரிய முனிவர்கள் உறைவதாகக் கூறினள். அச்செய்யுள் வருமாறு:—

"வீரன் அஃதுரைத்தலோடும் மெய்யிலாள்,
'விமல! யான் அச்
சீரியர் அல்லார் மாட்டுச் சேர்கிலேன் தேவர்
பாலும்
ஆரிய முனிவர்பாலும் அடைந்தனன் இறைவ!
மண்டோர்
காரிய முண்மை நின்னைக்காணியவந்தேன்"
என்றாள்.

பின் அவள் காதலுணர்ந்த இராமன் "நீ அந்தணன் மகள், நான் அரசன். ஆதலின் குலம் ஒவ்வாது. நீ அரக்கி, நான் மனிதன். ஆதலின் உன்னை மணத்தல் கூடாது. உன்னுடைய தமையன் வந்து கொடுத்தால் கொள்வேன்" என்கிறான். சூர்ப்பனகை "என்தாய் அரசன் மகள். நான் தவத்தால் அரக்கத்தன்மை போக்கினேன். நாம் கந்தர்வ மணம் செய்தால் பின் என் தமையன் இசைவான் என்று மறுமொழி கூறினாள். அப்போது சீதை வர சூர்ப்பனகை வெகுண்டு "இவள் ஓர் அரக்கி, இவளை வெறுத்துத்தள்ளி என்னை மண" என்று அவளை அதட்டினாள். உடனே இராமன் "நீ போய்விடு. இல்லையானால் என் தம்பி முனிவான் ஆதலின் போ" எனவும், அவள் "இக்குருபியை விரும்பி என்னை இகழ்வதேன், என்னை மணக்க மன்மதனும் தவம் புரிகின்றனன்" என்றாள். உடனே இராமன் சீதையோடும் குடிசைக்குள்ளே போய் விட்டான். ஞாயிறு மேற்குக்கடலிலே மறைந்தான். இரவு வந்தது. இரவெல்லாம் சூர்ப்பனகை மதியாலும் தென்றலாலும் மிகவாடி இராமனையே நினைந்து வருந்தியிருந்தாள்,

மேலே கண்ட வரலாறு சூர்ப்பனகையை மிகவும் இழிவு படுத்திப்பொய்யளாக்குவதாக உளது. இராமன் சூர்ப்பனகையிடம் தன் தம்பி மணமிலனாகி மங்கையரின்பமுணரானெனப் பல பொய்யுரை கூறியதையெல்லாம் கம்பர் மறைத்து சூர்ப்பனகை உள்ளதைக் கூறினதையெல்லாம் மாற்றி அவள் தான் அரக்கரை வெறுத்தமை கூறினளென அவள் மேல் பொய்ம்மை யேற்றுகிறார். கம்பர் இராமனாதியரும் முனிவரும் தேவரும் ஒரே வகுப்பினரென்பதையும் இராவணாதியர் வேறு வகையினரென்பதையும் உணர்ந்தேயிருந்தார். சூர்ப்பனகை கூற்றாக "தேவர் பாலும் முனிவர்பாலும் அடைந்தனன்" என்று கம்பர் கூறுகிறார். இதனால் ஆரியரைப் பலபடப் புகழ்ந்து தமிழ் மக்களைத் தாழ்த்துவதே தமது கொள்கையாகக்கொண்டவர் கம்பரென்பதும், ஆரியர் தமிழரென்ற உணர்ச்சியில்லாதவராகக் கம்பர் இல்லை என்பதும், வெள்ளிடை விளக்கமே.

இராமனுக்கும் சூர்ப்பனகைக்கும் நடந்ததாகக் கூறப்பெறும் வாக்கு வாதங்களெல்லாம் கம்பருடைய கற்பனைகளாகிய பொய்யுரைகளே. இப்படியும் ஒருவர் தமிழ் மக்களிடைத்தோன்றினாரே! இவர் வாலியின தம்பி சுக்கிரீவனையும், இராவணன் தம்பி விபீஷணனையும் எவ்வாற்றானும் ஒப்பர் என்பதில் என்ன தடை?

இராமன் சூர்ப்பனகையை வெளியே விட்டு விட்டுச் சீதையுடன் குடிசையுட் சென்றானென்பதும் சூர்ப்பனகை இரவெல்லாம் வெளியிலிருந்து தவித்தாளென்பதும் கம்பருடைய பொய்யுரைகளே. மேலும் கம்பர் புராணியைத் தொடர்ந்து செல்லுவோம்,

விடிந்ததும் இராமன் வெளியே சென்றான். சீதை தனித்திருக்கிறாளென எண்ணி சூர்ப்பனகை அவளிடம் செல்ல இலக்குவன் அவளைப் பிடித்து மயிர்த்தலைப்பற்றி "மூக்கும் காதும் முலைக்கண்களும்" அறுத்தான். சூர்ப்பனகை பலவாறு புலம்பி அழுது அங்கே வந்த இராமனிடம் தெரிவித்தாள். அவன் நடந்தவற்றைக் குறிப்பாலுணர்ந்துகொண்டு அவளை "நீ யார்?" என்று கேட்டான். அவள் "உனக்கு என்னைத் தெரியவில்லையா!" என்று கூறி தான் இராவணன் தங்கையென்றாள், இராமன் "இங்கேன் வந்தா"யெனவும், அவள் நான் "நேற்றும் வரவில்லையா!" என்றனள். இராமன் "தம்பி! நீ இவ்வாறு செய்யக் காரணமென்னை?" என வினவினன். இலக்குவன் நடந்தது கூறினன். சூர்ப்பனகை "மாற்றவளைக்கண்டால் மனம் வெகுளாதோ?" என்றனள். இராமன் அவளை "ஓடிப்போ" என அவள் "என்னை ஏற்றால் பிழைப்பீர். இல்லையானால் இராவணன் உங்களைக்கொல்வான். நீங்கள் இவளை உருக்குலைத்தால் பிறர் இவளை விரும்பார், நம்மிடமே இருப்பாளென்று உருக்குலைத்தீரோ? ஆதலின் என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்." என்றனள். இராமன் தன் வரலாறு கூறி "அரக்கரைக்கொண்டுவா அவரைக்கொல்வேன்" என்றனன். அவள் "அப்படியாயின் நீங்கள் என்னைச் சேர்த்துக்கொண்டால் அரக்கருடைய உளவெல்லாம் உங்களுக்குக் கூறுவேன்" என்றாள். அப்போது இலக்குவன் "இவளைக் கொல்லாது விட்டால் இன்னும் துன்புறுத்துவாள்" என்ன, இராமனும் "இவள் போகாளேல் அவ்வாறே இவளைக்கொல்" என்றனன். உடனே சூர்ப்பனகை "உங்களைக் கொல்லக் கரனை அழைத்து வருகிறேன்" என்ற ஓடினாள். இது கம்பர் கூறும் வரலாறு.

இராமனே நேரில் திருவாய் திறந்து சூர்ப்பனகையை உருக்குலைக்க ஏவியிருக்க அக்கதையை மாற்றி இராமனை நல்லவனாக எண்ணிக் கம்பர் மேலேகண்டவாறு கதையை மாற்றியிருக்கிறார். சூர்ப்பனகை சில நாழிகை நேரமே அவர்கள் முன் இருந்தனளாகக் கம்பர் அவள் இரண்டு நாள் இருந்தனள் என்கிறார். இரவெல்லாம் அவள் காமுற்று வருந்தியிருந்தமைகூற அவருக்கெழுந்த ஆசையில் இவ்வாறு கதையை மாற்றினர்போலும்! அவள் மறுநாள் சீதையைப் பின் தொடர்ந்ததாகவும் இலக்குவன் உடனே அவளைப்பற்றி மூக்கையும், காதுகளையும், முலைகளையும் அறுத்தனன் என்றும் கம்பர் கூறுகிறார். அவள் மூக்கையும், காதுகளையுமே அறுத்தனன் என்று வால்மீகி கூறக் கம்பர் அவளுடைய முலைகளையும் அறுத்தனனென நெஞ்சம் கூசாது நினைத்து வாய்கூசாதுபாடிக் கை கூசாது எழுதியிருக்கின்றனரே! வால்மீகி கூறியதையே கூறியிருப்பின் இவர்மேல் பிழைவாராது. வால்மீகி கூறாததாக இத்தீய செயலையும் இலக்குவன் செய்தனனெனக்கூறி அவனைத் தீயவனாக்கியதோடு சூர்ப்பனகையையும் மிக இழிவு படுத்துகிறார். என்னே இவர் தம் தீயமதி! என்னே இவர் தம் கீழ்மை! ஒரு பெண்ணாகிய சூர்ப்பனகையை தமிழ்ப் பேரரசனாகிய இராவணேச்வரனின் தங்கையை இழிவு படுத்தவேண்டுமென்று ஆரியர் கட்டிய கதையாகிய இதிலே மேலும் இழிவுபடுத்தக்கூடிய இச்செயலைக் கூறினாரே கம்பர்? இவரை என் செய்வது? இவரையும் கல்வியில் பெரியவரென்று இப்பித்துடைய உலகம் கூறுகின்றதே! மேலும் அவள் கீழே அறுந்து கிடந்த முலைகளைக் கையாலெடுத்துப் பார்த்து அழுதனளென்று துப்பொய்க் கதைக்கும் மேல் பொய்க்கதை கூறுகின்றனன், புன்மதிக் கம்பன் "நிலத்தினில் இணைத்தடங் கொங்கை பற்றும் பார்க்கும் மெய்வியர்க்கும்" என்று கூறுகின்றனன்.

ஒழுக்கமுடையவனென்று ஆரியர் போற்றும் இலக்குவன் உண்மையில் ஒழுக்கமுடையவனேல் சினம் பற்றிக் காதையும் மூக்கையும் அறுத்தாலும் ஓர் பெண்ணினுடைய தொடர்கரும் உறுப்பைத் தொடலாமா? அதிலும் அதனை அறுக்கலாமா? ஒரு பெண்ணைத் தொடுதலே தீமையான ஒழுக்கமாயிருக்க இவ்விலக்குவன் இவ்வாறு மன

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

கேரளத்தில் சுயமரியாதைப் பிரசாரம்

திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமியார், எஸ். குருசாமி, அ. பொன்னம்பலனார், எஸ். நடராஜன் ஆகியவர்கள் எரணாகுளத்திலிருந்து 9-ந்தேதி பகல் 11 மணிக்கு பாலக்காடு வந்து சேர்ந்தார்கள். ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்தபடி பாலக்காடு பிரமுகர்கள் திருவாளர்கள் ப. சு. முருகப்பத்தரகர், சங்குத் தரகர், ம. குட்டிச்சாமி மன்றாடியார் ஆகிய கனவான்களால் பெரியகடைவீதி கண்ணகையம்மன் கோவில் காலியிடத்தில் மாலை 6 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்திற்கு பாலக்காடு வியாபாரிகளும் மற்றும் அநேக கனவான்களுமாகச் சுமார் ஆயிரம் பேருக்கு மேலாக வந்திருந்தார்கள். கூட்டத்திற்கு திருவாளர் முனிசிபல் கவுன்சிலர் பி. சி. கந்தசாமி பிள்ளை அவர்களை தலைமை வகிக்கும்படி திரு. குட்டிச்சாமி மன்றாடியார் பிரேரேபிக்க திரு. பி. ஆர். துரைசாமி அவர்கள் ஆமோதிக்க திரு. பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்து திரு. ஈ. வெ. ராமசாமியைப்பற்றி இரண்டொரு புகழுரைகளைச்சொல்லி தேசத்தின் தற்கால நிலைமையைப்பற்றிப்பேசும்படி கேட்டுக்கொண்டார். திரு. ஈ. வெ. ராமசாமியார் அவ்விடத்திலும் அந்த பிரயாணத்தில் மற்ற இடங்களிலும் பேசியதின் சுருக்கம் வருமாறு.—

சகோதரர்களே!

இங்கு கூடியிருக்கும் உங்களில் பெரும்பாலோர் எனக்குப்பழைய நண்பர்களாகவே காணப்படுகின்றீர்கள். வியாபார முறையில் இந்த ஊர் சுமார் 30 வருஷத்திய பழக்கமும் அதிகமான பரஸ்பர விஸ்வாசமும் உள்ள ஊராகும். நான் வியாபாரம் நிறுத்திய இந்த 10 வருஷ காலத்திற்குள்ளும் இந்த ஊருக்கு பலதடவை வந்து பல விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கின்றேன். ஒத்துழையாமை பற்றியும் தீண்டாமை விலக்கு விஷயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை தெருவில் நடக்கவிட வேண்டும் என்பது பற்றியும் இதே இடத்தில் பலதடவை பேசியிருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். சுமார் இரண்டு வருஷத்திற்குள்ளாக இந்த ஊரில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கல்பாத்தியில் பார்ப்பனர்கள் குடி இருக்கும் வீதிகளில் ஈழுவர்கள் தீயர்கள் என்று சொல்லப்பட்ட சகோதரர்கள் நடக்க பாத்தியம் ஏற்பட்டிருப்பதும் கடைவீதியில் செருமக்கள் என்னும் மக்கள் நடக்க விடப்பட்டிருப்பதும் ஒரு பெரிய மாறுதல் என்று சொல்லக்கூடுமானாலும் இன்னமும் அநேக காரியங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. சில இடங்களில தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று சொல்லப்படுபவர்களே அத்தெரு வழிகளில் நடக்க சம்மதிப்பதில்லை என்று சொல்லப்படுகின்றது. ஏனென்றால் அவர்கள் நடக்கப்பயப்படுவதாகவும்சொல்லப்படுகிறது. அவர்களுக்கு தைரியமூட்டி பயத்தைதெளிவிக்கச் செய்ய வேண்டிய பொறுப்பு நம்முடையதென்பதை நாம் உணருவதில்லை.

இன்று நான் பேசுவதற்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயம் தற்கால தேசிய நிலைமை என்பதாகும். தேசிய நிலைமை என்பதற்கு நமது தேசத்தினுடையவும் தேச மக்களுடையவும்நிலைமையைப்பற்றியும் அக்கம்பக்கமுள்ள தேசங்களின் நிலைமைக்கும் நமது தேசத்தின்நிலைமைக்கும் என்னவித்தியாசம் என்பதுபற்றியும் அதற்கு காரணங்கள் என்ன என்பதுபற்றியுமே நான் பேசவேண்டும் என்று நீங்கள் கருதுவதாக நான் நினைக்கின்றேன்.

சகோதரர்களே! ஒவ்வொரு நாடும் இது சமயம் தனது பழைய நிலைமையில் இருந்து விடுபட்டு புதிய முறையில் முன்னேறவேண்டும் என்கின்ற ஆசைகொண்டு அதிலேயே ஈடுபட்டிருக்கின்றன. இவ்வழியில் சில நாடுகள் கொஞ்சநாளைக்குமுன்பே இறங்கி வெற்றிபெற்று பழமையைச் சற்றும் லக்ஷியம் செய்யாமலும் வெறுத்தும் அழித்தும் புதுமைகளில் இறங்கி எவ்வளவோ முற்போக்கடைந்துவிட்டன. சில நாடுகள் பழமையை அழிக்கும் வேலையில் இப்போதுதான் இறங்கி அதிலேயே வெகு கஷ்டத்துடன் ஈடுபட்டு வேலைசெய்வதன்மூலம் வெற்றியடைந்தும் வருகின்றன. ஆனால் நமது நாடோ பழமையிலிருந்து ஒரு சிறிதுகூட மாற்றமடையக்கூடாது என்னும் முரட்டுப் பிடிவாதத்தில் இறங்கி பழமையை காப்பாற்றப்பாடுபடுவதோடு அதற்கும் முந்தின பழமையைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கி வெகு தீவிரமாய் வேலைசெய்கின்றது. இந்த உபயோகமற்றதும் பிற்போக்கானதுமான காரியத்திற்குச் சிலர் நமது மக்கள் முன் பெரிதும் பொருளற்றவிதத்தில் மதத்தையும் கடவுளையும் கொண்டுவந்து போட்டுக்கொண்டு வெகுபாடுபட்டு குழப்பி வருகின்றார்கள். இவர்கள் பாமரமக்கள் முன்னிலையில் "மதத்திற்காக எதையும் தியாகம் செய்வேன் உயிரையும் விடுவேன்" என்று வெறும் ஆவேசப்பேச்சுப்பேசுவதன் மூலமே மக்களின் அறிவைக்கெடுத்து நாட்டின் முற்போக்கை நாசப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். "கடவுளுக்கு ஆபத்து வந்துவிட்டது ஆஸ்திக மகாநாடு கூட்டுங்கள்" என்பவர்களும் தர்மங்களுக்கு ஆபத்து வந்துவிட்டது கூட்டுங்கள் வருணாசிரம மகாநாடு" என்பவர்களும் "புராணங்களுக்கும் இதிகாசங்களுக்கும் ஆபத்து வந்துவிட்டது, கூட்டுங்கள் சமயமகாநாடு" என்பவர்களும் இப்போது மிகுதியும் மலிந்துவிட்டார்கள். இந்தப்படியே அடிக்கடி மகாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் செய்துகொண்டுமிருக்கிறார்கள். நாட்டின் நிலையைப்பற்றிய கவலையில்லாத சோம்பேறிகளினுடையவும் சுயநலப் பண்டிதர்களுடையவும் தொழில் இதுவென்றால் ஆங்கிலம் படித்தவர்களென்னும் ஒரு கூட்டத்தார் மற்றொருபக்கத்தில் "தேசத்திற்கு இது சமயம் சுயராஜியம் மிகவும் அவசியம்" என்று கூப்பாடு போட்டுக்கொண்டு அதற்கேற்றபடி பல ஆள்களை கூலிக்குப்பிடித்து ஏவிவிட்டு தேசம் போச்சுது என்றும் தேசியம் போச்சுது என்றும் தேசமே பிரதானம் என்றும் கூப்பாடு போடச்செய்து அரசியல் என்றும் காங்கிரசென்றும் தேசியமென்றும் மகாநாடுகள் கூட்டி பொதுமக்கள் பேரால் தீர்மானங்கள் செய்யத் திரிகின்றார்கள். ஆனால், இக்கூட்டத்தார் யார் என்று பார்த்தால் தங்கள் குழந்தைகுட்டிகளுக்கு வெள்ளைக்காரர்கள் பெயர் வைத்துக்கொண்டும் வெள்ளைக்கார ஆதிக்கத்திற்கு உதவி செய்து பிழைப்பதற்கு தங்கள் பெண்டு பிள்ளைகளைத் தயார் செய்துகொண்டும், வெள்ளைக்காரர் பூட்சு துடைப்பதில் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டும் 'வெள்ளைக்காரர்களை விரட்டவேண்டும்' "வெள்ளையர் ஆட்சியை ஒழிக்கவேண்டும்" என்று கூப்பாடு போடுகின்றவர்கள் ஒரு சிலரும், தொட்டதற்கெல்லாம் வெள்ளைக்காரர்கள் மீதே பழிபோட்டு "வெள்ளைக்கார ஆட்சியாலேயே நமது நாடு அநியாயமாய் பாழாய் விட்டது" என்றும் "என்ன கஷ்டப்பட்டாவது அதை ஒழித்துவிட்டால் பிறகு நமக்கு எல்லாம் சரிப்பட்டுப்போகும்" என்றும் ஆதலால் இன்ன இன்னாருக்கு ஓட்டுக் கொடுங்கள் என்றும் சொல்லிக்கொண்டு உண்மையான காரணத்தை மனதார மறைத்து கூலிக்கு கூப்பாடு போடுகின்றவர்கள் ஒரு சிலரும் ஆவார்கள். எனவே இம்மாதிரியான சூழ்ச்சிகளிலேயே நாட்டின் கவனமுழுவதையும் ஈடுபடச்செய்துவிட்டு அவசியமான காரியத்திற்கு இடையூறுகளை உண்டாக்கிக்கொண்டிருக்கின்றதே இது சமயம் நமது நாட்டின் தற்கால தேசநிலைமையாக இருக்கின்றது. இந்த நிலைமையை அடியோடு மாற்றி மக்களை உண்மையான தேசிய முன்னேற்றத்தில் ஈடுபடச்செய்வதற்கென்றுதான் தேசிய சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இம்மாதிரி கொள்கையில் ஈடுபட்டிருக்கும் இவ்வியக்கம் முன் சொல்லப்பட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும் கூட்டத்தார்களுக்குப் பெரிதும் அடியோடு விரோதமாயிருப்பதும் அவர்களால் பழிக்கப்பட்டு திரித்துக்கூறி எதிர்பிரசாரம் செய்யப்படுவதும் உண்மை உணர்ந்தவர்களுக்கும் அறிஞர்களுக்கும் சிறிதும் அதிசயமாகத் தோன்றாது. இப்போது மேற்கண்ட இரண்டு மூன்று கூட்டத்தார்களும் தனித்தனியே புறப்பட்டு ஊர் ஊராய்த்திரிந்து பிரசாரம் செய்துவருவதை நீங்கள் தினம் பத்திரிகையில் படித்திருக்கலாம்.

வருணாசிரமக்காரர்கள் கூட்டம் கூட்டி அங்குபேசுவது என்ன என்பதை சற்று யோசித்துப்பாருங்கள்.

"இந்து மதமே உலகத்தில் சிறந்த மதம், இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம், வேதத்தின் சாரம் மனுதர்ம சாஸ்திரம், மனுதர்ம சாஸ்திரத்தின் முக்கியம் வருணாசிரம தர்மம் வருணாசிரமத்தின் தத்துவம் பிராமணன்; க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், சண்டாளன் ஆகிய பிறப்பில் ஜாதி பிரிக்கும் கொள்கை. ஜாதிக்கொள்கையின் உண்மை பிராமணன் கடவுள் முகத்தில் பிறந்தவன், க்ஷத்திரியனும், வைசியனும் கலியுகத்தில் கிடையாது. சூத்திரன் கடவுள் பாதத்தில் பிறந்தவன். அவன் பிராமணர்களுக்கு அடிமையாயிருந்து தொண்டு செய்யவே கட

வுளால் இழிவான ஸ்தானத்திலிருந்து பிறப்பிக்கப்பட்டவன். பிராமணனுக்கு அடிமையாயிருந்து தொண்டு செய்துவரவேண்டியவன், அவனது பிறவித்தொழில் தர்மத்தைச் செய்யாவிட்டால் சண்டாளனாகின்றான்.

சூத்திரன் படிக்ககூடாது பணம் சேர்க்கக்கூடாது, சுதந்திரமாய் நடக்கக்கூடாது. சூத்திரன் மேற்கண்ட தனது கடமையிலிருந்து விலகியதால் பிராமணனும் தன் கடமையிலிருந்து விலகி சுயநலக்காரனாகவேண்டியதாயிற்று. பெண்களும் விதவைகளும் நாடார்களும் சங்கங்கள் வைத்து சுவதந்திரியம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்" என்றும் சொல்வதோடு உடன் கட்டையேறும் வழக்கம் ஒழிந்ததைப்பற்றி வருத்தப்படுவதும், "பெண்கள் படிக்கக்கூடாது, விதவைகள் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது, அவர்களுக்குச் சொத்துரிமை இருக்கக்கூடாது, குழந்தைப் பருவத்திலேயே கல்யாணம் செய்யவேண்டும், சூத்திரன் என்ற சொல் மிகவும் பரிசுத்தமானது, சூத்திரன் பிராமணனுக்கு அவசியமானவன்" என்றும்,

மற்றும் ஆகலால் "சுயமரியாதை இயக்கத்தை ஒழிக்கவேண்டும்" என்றும் இதுபோன்றவைகளையே பேசுகின்றார்கள். இதை அநுசரித்து தீர்மானங்களும் செய்து பொது ஜனங்களுக்கும் சர்க்காருக்கும் அனுப்புகிறார்கள். வருணாசிரமக்காரர்கள் நிலை இப்படியானால்

சமயக்காரர்கள் என்பவர்களோ "சைவ சமயமே உண்மை மதம். சிவனே முழு முதற்கடவுள். வேத ஆகமமே அதற்கு ஆதாரம் என்பதும்.

புராணக்காரர்களோ "சமயம்போச்சுது" "சமய பெரியாருக்குஆபத்து" "சமயநூல்களுக்கு ஆபத்து" "கலைகளுக்கு ஆபத்து" என்பதும் மற்றும் "10வயதுக்கு முன்னால் அவினாசியில் முதலை விழுங்கிய குழந்தையை முதலை வயிற்றிலேயே வளரச்செய்து 14 வருஷ வாலிபனாய் அந்த முதலை வாயிலிருந்தே கக்கும்படி செய்த 3 வயதுள்ள பெரியோர்களையும், எலும்பைப் பெண்ணாக்கிய 4வயதுள்ளபெரியோர்களையும், ஒரு பாட்டில் ஊமைப்பெண்ணைப் பேசவைத்த5வயதுள்ளபெரியோர்களையும், பனைஓலை நறுக்கை பிரவாக வெள்ளத்தில் எதிர் நீந்திப்போகும்படிசெய்த 6வயதுள்ள பெரியோர்களையும், எண்ணாயிரம் சமணர்களை வாதத்தில்தோல்வியுறச்செய்து கழுவேற்றக்காரணமாயிருந்து சைவத்தைக் காப்பாற்றிய ஜீவகாருண்ணிய சீலர்களாகிய சைவ பெரியார்களையும் குற்றம் சொல்லுகின்றார்களே இவைகளை இனியும்பொறுத்துக்கொண்டிருக்கலாமா" வென்றும், ஆதலால் சுயமரியாதை இயக்கத்தை அழிக்கவேண்டும்" என்றும்,

"60 ஆயிரத்து மூன்று பெண்டாட்டிகளை மணந்து 60 ஆயிரம் வருஷம் வாழ்ந்தும் பிள்ளையில்லாமல் யாகத்தில் பக்குவம் செய்த பாயாசத்தைக் குடித்தவுடன் கர்ப்பமாகி பெற்ற பிள்ளையாகிய ராமனை மகாவிஷ்ணுவை குற்றம் சொல்லுகின்றார்களே. உழும்போது கலப்பையில்பட்டு பூமியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட பரிசுத்த சீதையாகிய மகா லட்சுமியைகுற்றம் சொல்லுகிறார்களே" என்றும், "ஆதலால் சுயமரியாதை இயக்கத்தை அழிக்கவேண்டும்" ஆதலால் "ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுகொடுக்கக்கூடாது" என்றும் பிரசாரம் செய்வதும், வருணாசிரம சமய புராணக்காரர்கள் தொல்லை இவைகளானால் இனி,

அரசியல் தேசிய காங்கிரஸ்காரர்கள் என்பவர்களோ "தேசம் பிரதானம், வகுப்பு வித்தியாசங்களையும், உயர்வு தாழ்வுகஷ்டங்களையும் மறந்து விடுங்கள். முதலில் வெள்ளைக்காரனை ஒழித்து விட்டு அப்புறம்நாம் நமக்குள் இருக்கும் தகராறுகளை தீர்த்துக்கொள்ளலாம் ஜஸ்டிஸ் கட்சியார்கள் வகுப்புவாதம் பேசுகின்றார்கள். சர்க்கார் உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளுகிறார்கள். மந்திரிகளை ஆதரிக்கின்றார்கள், சர்க்காருக்கு உதவி செய்கின்றார்கள். சைமன்கமிஷனை வரவேற்று அவர்களிடம் குறைகளைச் சொல்லி தேசத்தின் மானத்தைக்கெடுத்து விட்டார்கள். இந்த காரணங்களால் அவர்கள் தேசத்துரோகிகளாய்விட்டார்கள், அன்றியும் கடவுளையும் மதத்தையும் கண்டிக்கும் சுயமரியாதை இயக்கத்துடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் நாஸ்திகர்களாகிவிட்டார்கள்; மதத்துரோகிகளாகிவிட்டார். ஆதலால் தேசத்துரோகத்தையும், மதத்துரோகத்தையும் நாஸ்திகத்தையும் மேற்கொண்டுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுச் செய்யாதீர்கள்" என்றும்,

"சுயமரியாதை இயக்கம் காங்கிரசை வைகின்றது. மதத்தை அழிக்கவேண்டும் என்கின்றது. கோயில்களைகெடுக்கவேண்டும் என்கின்றது ஆதலால் அந்த நாஸ்திக இயக்கத்தில் யாரும் சேராதீர்கள், அதை வளர்க்கவிடாதீர்கள்" என்றும் பிரசாரம் செய்கின்றார்கள்.

சகோதரர்களே!

இந்த இருபதாவது நூற்றாண்டில் அதாவது உலக அநுபவமும் அறிவு வளர்ச்சியும் மக்களுக்குதாராளமாய் கிடைக்கக்கூடியதும் சையன்ஸ்அறிவும் மின்சாரசக்தியின் வேலையும், பழைய உலகத்தையேதலை கீழாய் கவிழ்த்துக்கொண்டிருப்பதுமான இந்தக் காலத்திலேயே இக்கூட்டங்கள் இவ்வளவு தைரியமாய் வெளிக்கிளம்பி உலகத்தை ஏமாற்றத் துணிந்திருப்பதை நினைக்கும்போது ஐயோ பாவம் என்று கருதத்தக்க ஆயிரம் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்னிட்ட பழங்காலமாகிய புத்தர், சமணர் காலத்தில் இக்கொடும்பாவிகளான பாதகர்கள் என்ன என்னவெல்லாம் செய்திருக்கமாட்டார்கள்? என்பதைச்சற்று நினைத்துப்பாருங்கள். கடவுளைப்பற்றி பேசும் ஒவ்வொரு அயோக்கியனும் கடவுள் சர்வசக்தி உள்ளவர் என்பதாகச் சொல்லிக்கொண்டு தனக்குமாத்திரம் தான் கடவுள் மற்றவனுக்கு இல்லையென்றும் தான்தான் மற்றவனுக்குக் காட்டிக்கொடுத்து அக்கடவுளைக் காப்பாற்ற புறப்பட்டவன் என்றும நினைத்துக்கொண்டு பேசுவதை பார்க்கும்போது அத்தகையவர்களை எவ்வளவு அறிவிலிகள் அல்லது அயோக்கியர்கள்என்று நினைக்கவேண்டி இருக்கின்றது.

கடவுளைக் காப்பாற்றுவதும் கடவுள் இருப்பதாக உலக மக்கள் அறியச்செய்வதும் என்கின்ற ஒரு தொண்டை ஒருவன் ஏற்றுக்கொண்டு தன்னை மகா புத்திசாலி என்றும் தான் ஒரு பெரிய பரோபகாரியென்றும் சொல்லிக்கொண்டு எவனாவது வெளியில் புறப்பட்டு உங்களுக்கு உபதேசம் செய்யவந்தால் நீங்கள் அதைக்கடவுள் தொண்டுஎன்று நினைக்கின்றீர்களா? அல்லது கடவுளைப் பரிகாசம் செய்து பிழைக்கவேண்டிய நிலையில் உள்ள வயிற்றுப்பிழைப்பு தொண்டு என்று நினைக்கின்றீர்களா? என்று கேட்கின்றேன். ஒரு சமயம் யாராவது தங்கள் அறிவீனத்தால் இது கடவுள் தொண்டாயிருக்கலாம் என்று நினைப்பார்களேயானால்-அவர்கள் கடவுளைப்பற்றி நினைத்திருக்கும் எண்ணம்தான் என்ன என்று யோசித்துப் பாருங்கள். திரு. சீனிவாசய்யங்கார் தலைவர் என்பதைப் பரப்ப ஒரு கூலிக்கூட்டம் அவர்பின்னால்திரிந்து கொண்டுசென்றவிடங்களிலெல்லாம் "சீனிவாசய்யங்கார் என்று ஒருவர் உண்டு; அவர் இந்தியாவுக்கே தலைவர்" என்று கூப்பாடு போட்டு வயிறு வளர்ப்பதுபோல் கடவுள் என்று ஒருவர் உண்டு அவர் சர்வசக்தி உள்ளவர் என்று சொல்வதன் மூலம் தான் கடவுளை நிலைநிறுத்தவோ அல்லது மக்கள் உணரும்படி செய்யவோ வேண்டியது அவசியமா? என்று கேட்கின்றேன்.

அன்றியும் அதற்காக மனிதன் பூசை உற்சவம் வேண்டுதலை ஆகியவைகளுக்கு ஆக பல கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்யவேண்டியது அவசியமா? என்று கேட்கின்றேன். பெரும்பான்மையான மக்கள் மழைக்கும் வெய்யிலுக்கும் ஒதுங்கக்கூட இட நிழலும் மறைவும் இல்லாமலும் இரண்டுநாளைக்கு ஒருவேளை ஆகாரமில்லாமலும் வயிறு நடுங்கும்போது இந்தக்கடவுள்களுக்கு லக்ஷம் பத்துலக்ஷம் கோடி இரண்டு கோடி ரூபாய்களில் ஏழுசுற்று மதில் சுவர்களும் நூற்று இருபதுஉயர அடி கோபுரங்களும்ஆயிரங்கால்மண்டபங்களும்பத்து நூறு, ஆயிரம் லக்ஷம் தீபங்களும் தினம், மூன்று வேளை நான்கு வேளை ௬ ஜாமவேளை பூஜைகளும் வேண்டுமா என்று கேட்கின்றேன். வேலை செய்ய சக்திருந்தும் ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமலும் தொழில் இல்லாமலும் பெண்டுபிள்ளைகளுடனும் கிழடு கிண்டுகளுடனும கர்ப்பத்துடனும் சிங்கப்பூர், பினாங்கு, மோரீசு, தென் ஆபிரிக்கா, நெட்டால், ஆஸ்ட்டிரேலியா பிஜி முதலிய இடங்களுக்கு நமது நாட்டிலிருந்து கும்பல் கும்பலாய் கூலிகளாக தூத்துக்குடி, பாம்பன், நாகப்பட்டணம், சென்னை, காக்கிநாடா, மசூலிபட்டணம், ரங்கூன் முதலிய துறைகளில் வாரம் பதினாயிரம் இருபதினாயிரம் கணக்காக கப்பல் ஏறிக்கொண்டிருக்கையில் இந்தக்கடவுள்களுக்கு வருஷம் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து அபிஷேகம், அர்ச்சனை, கல்யாணம், கருமாதி, உற்சவம், ஊர்கோலம், தேர், திருவிழா, தாசி வேசிகள், ஆட்டம், அதிர்வேட்டு, பாணம், முத்தங்கி, வைரக்

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.)

ஓர் சமாதானம்.

நமது "குடி அரசின்" சந்தாதாரர்கள் பெருக்கத்தால், ஈரோட்டிலிருந்து வெளியிடத்தகுந்த இயந்திர சௌகரியங்கள் போதாமலிருப்பதால் கொஞ்சகாலத்துக்கு நமது பத்திரிகை நிலயம் கூடியசீக்கிரம் சென்னைக்கு மாற்ற உத்தேசித்துள்ளோம். அதுவரை பத்திரிகைவெளியாக இரண்டொரு வாரத்துக்குஒன்றிரண்டு நாள் தாமதப்படலாம். ஆகையால் வாசகர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு சுக்கில-ஹூ வைகாசி-மீ 6-உ.

உங்களுக்கு
எது வேண்டும்?

வகுப்பு வாதமா? சமூக வாதமா?

வகுப்புவாதம் எல்லாவகுப்புக்கும் சம சந்தர்ப்பமும் சமசுதந்தரமும் வேண்டும் என்கின்றது. சமூகவாதம் தங்கள் சமூகம் மாத்திரம் எப்போதும் உயர்வாகவே இருக்கவேண்டும் என்கின்றது.

காங்கிரசென்றும் தேசியமென்றும் சுயராஜ்ஜியமென்றும் நமது பார்ப்பனர்களும், அவர்களது அடிமைகளும், கூலிகளும் போடும் கூச்சல்கள் எல்லாம் பார்ப்பனசமூக ஆதிக்கத்திற்கெனச் செய்யப்படும் சூழ்ச்சி என்றும், அவர்கள் உட்கருத்துக்கள்எல்லாம் எப்படியாவது பார்ப்பனரல்லாதாரை வகுப்புவாதிகள் என்றுசொல்லி அவர்களுடைய நிலைமையைத்தாழ்த்தி அவர்கள் தலையெடுக்க வொட்டாமல் செய்யவேண்டும் என்பதைத்தவிரவேறு ஒன்றும் அல்லவென்றும் பார்ப்பனரல்லாதார்களில் வேறுவழியில் ஆரைவயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழிதேடிக்கொள்வதற்கு முடியாதவர்களும் பார்ப்பனர்களுக்கு கூலிகளாயிருந்தும் அடிமைகளாயிருந்தும் சமூகதுரோகம் செய்தாலொழிய பிழைக்கவும் பெருமைபெறவும் முடியாதவர்களுமே பெரிதும் அவர்கள் கூட இருகின்றார்களே ஒழிய மற்றபடி யோக்கியமும் பொறுப்பும் சுயமரியாதையும் சுயேச்சையும் உள்ளவர்களில் எவரும் பார்ப்பனர்கள் கூட இல்லை என்றும் நாம் பலதடவைகளில் சொல்லியும் எழுதியும் வந்திருக்கின்றோம்.

இதன் உண்மைகள் முக்கியமாக இந்த இரண்டுமூன்று வருஷத்திய காங்கிரஸ் நடவடிக்கைகளினால் தாராளமாய் வெளியாயிருப்பதும் இதனால் நமது நாட்டில் காங்கிரசின் பெயரைச்சொல்லிக்கொண்டு எவ்வளவு மானங்கெட்டாலும் பார்ப்பன அடிமைகளும் கூலிகளும் தவிர வேறு பொறுப்புள்ளயாரும் வெளியில் வர யோக்கியதை இல்லாமல் போயிருப்பதுமே போதுமான உதாரணமாகும்.

மேலும் இன்றைய தேதியில் நமது நாட்டில் காங்கிரஸ் தலைவர்களாகவும் காங்கிரஸ் முக்கியஸ்தர்களாகவும் காங்கிரஸ் பிரசாரகர்களாகவும் விளங்குபவர்கள்யார் என்று பார்ப்போமானால் திருவாளர்கள் எஸ். சினிவாசய்யங்காரும் சத்தியமூர்த்தியும் முதல்வரிசையிலிருப்பவர்களாவார்கள். அதாவது காங்கிரசின் அபிப்பிராயம் இன்னதுதான்என்று சொல்வதற்கும், காங்கிரஸ் அபிப்பிராயம் இன்னதாகத்தான் இருக்கவேண்டும்என்று அதிகார தோரணையில் சொல்லி திட்டம் ஏற்படுத்துவதற்கும் உரிமையுள்ளவர்கள். இந்தக்காரியத்தில் மாத்திரம் வேறு எந்த பார்ப்பனரல்லாதாரையும் அவர்கள் சேர்த்துக்கொள்ளவும் முடியாது மற்றபடி யாருக்கும் இந்தக் காரியங்களில் அதிகாரம் கொடுக்கவும் முடியாது.

அவர்களுக்கு அடுத்தாற்போல் திருவாளர்கள், ஓ கந்தசாமி செட்டியார், முத்துரங்க முதலியார், வரதராஜுலு, கல்யாணசுந்தர முதலியார், மயிலை முதலியார் ஏவலர் என்கின்றவர்கள் பார்ப்பனரல்லாத சமூகத்தின் பிரதிநிதிகளாகவும், திருவாளர் ஜயவேலு என்பவர் தீண்டப்படாதவர்கள் என்கின்ற சமூகத்தின் பிரதிநிதியாகவும், திருவாளர் குழந்தை என்பவர் கிருஸ்தவ சமூகத்தின் பிரதிநிதியாகவும், ஜனாப்புகள் ஷாபிமகமது சாயபு, அமித்கான் சாயபு, பஷீர் அகமட் சாயபு என்பவர்கள் மகம்மதிய சமூகத்தின் பிரதிநிதிகளாகவும் காங்கிரசின் இரண்டாவது அணியில் இருப்பவர்கள். இவர்களுக்கு திருவாளர்கள் அய்யங்காரும் அய்யருமசொல்வதற்குப் பின்னாலிருந்து ஆமாசாமி போடவும் ஆடு என்று சொல்லுகின்றபடி ஆடவும், "ஸ்ரீனிவாசய்யங்கார் தான் நமது அரும்பெரும் தலைவர்" என்று சொல்லி மேடைகளிலும் பத்திரிகைகளிலும் பேசவும் எழுதவும் தவிர காங்கிரசின் போரால் வேறுஎவ்வித அதிகாரமும் கிடையாது என்பதுஎல்லோரும் அறிந்தவிஷயமாகும்.

மேலும் இக்கூட்டத்தில் காங்கிரசிலும் தேசியத்திலுமே உடல்பொருள் ஆவி வாழ்க்கையாகியவைவெல்லாம் வைத்துக்கொண்ட உயர்திருவாளர்கள் பி. வரதராஜுலு வி. கலியாணசுந்தரம் ஆகியவர்கள் மாத்திரம், தங்களுக்கு இஷ்டமில்லையானால் காங்கிரசில் ராஜீநாமாக் கொடுக்கவும் வேறுவழியில்லையானால் மறுபடியும் தாங்களாகவேபோய்ச் சேர்ந்துகொள்ளவும் மாத்திரம் பூரண சுயேச்சை உரிமை வைத்துக் கொண்டிருக்கின்றவர்கள். மறுபடியும் இவர்கள் சேரப்போகும்போது அவர்கள் ஆக்ஷேபணை சொல்லாமல் சேர்த்துக்கொள்வதே தங்களுடைய மதிக்கத்தகுந்த செல்வாகென்று நினைத்துக்கொண்டிருக்கிறவர்கள்.

மற்றபடி பிரசாரக்காரர்கள் என்பவர்களைப்பற்றி நாம்சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டியவர்கள் இங்கு ஒருவருமிருக்கமாட்டார்கள் என்றே நம்பி அதை விட்டுவிடுகிறோம்.

நிற்க, இக்கூட்டத்தவர்களின் கொள்கையும் பிரசாரமும் என்ன என்று பார்ப்போமானால் "தேசிய வாதிகளுக்கு ஓட்டுக் கொடுத்து முனிசிபாலிட்டி, தாலூகா ஜில்லா போர்டு, சட்டசபை ஆகிய ஸ்தானங்களுக்கு அனுப்பவேண்டும், வகுப்புவாதிகளுக்கு ஓட்டு கொடுக்காமலும், ஆதரிக்காமலும் அவர்களை அடியோடு அழிக்கவேண்டும்" என்பதே தற்கால கொள்கையும் பிரசாரமும் ஆகும். இவர்களுக்கு இதற்கு முன் அனேக விஷயங்கள் வார்த்தையளவிலாவது கொள்கையாகவும், பிரசாரமாகவும் இருந்தன.

அதாவது, ஒத்துழையாமை, முட்டுக்கட்டை, பரஸ்பர ஒத்துழைப்பு, சிங்கத்தின் குகைக்குள் போய் அதைப் பிடித்து ஆட்டுவது, சர்க்காரைத் திணறச் செய்வது, பூரண மதுவிலக்கு, இரட்டை ஆட்சியை அழிப்பது கடைசியாக உத்தியோகமேற்காதது முதலாகியவைகளாக இருந்தன. நமது "குடி அரசு" தோன்றியபின் இதன் இரகசியங்கள் வெளியாகி இவைகள் எல்லாம் மறைந்து இப்போது வகுப்புவாதிகளை ஒழிப்பது என்பதுதவிர வேறு எவ்வித கொள்கையும் திட்டமும்இல்லாமல் போய்விட்டது. வகுப்புவாதிகள் யார்? அல்லாதவர்கள் யார்? என்று பார்த்தாலோ அது இவைகளையெல்லாம் விட மிக யோக்கியமானதாக இருக்கும். அதாவது வகுப்பு வித்தியாசம் ஜாதி உயர்வு தாழ்வு, ஒரு வகுப்புக்கு ஒரு நீதி ஆகியவைகள் அடியோடு கூடாது என்றும், எல்லா வகுப்புக்கும் சம உரிமையும், சம சந்தர்ப்பமும் இருக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யவேண்டும் என்பவர்கள் தான் இக்கூட்டத்தாருக்கு வகுப்புவாதிகளாகத் தென்படுகின்றார்கள்.

உயர்ந்த வகுப்பு என்பதாக ஒன்று உயர்ந்திருக்கவேண்டும், தாழ்ந்த வகுப்பு என்பதாக ஒன்று தாழ்ந்திருக்கவேண்டும், பார்ப்பனர்கள் உயர்ந்த வகுப்பு, மற்றவர்கள் அவர்களைவிட தாழ்ந்த வகுப்பு, சூத்திரர், பஞ்சமர் என்கின்ற வித்தியாசம் இருக்கவேண்டும். இந்த வித்தியாசங்களை ஒழிக்க யாரும் முயற்சிக்கக்கூடாது, எவ்வித சட்டமும் செய்யக்கூடாது என்பவர்கள் இவர்களுக்கு வகுப்புவாதிகள் அல்லாதவர்கள். சுருக்கச் சொன்னால் அவர்கள் கொள்கைப்படி பார்ப்பனர்களும் அவர்களை நத்திப்பிழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளவர்களும் அவர்களது கூலிகளும் வகுப்புவாதிகள் அல்லாதவர்களாவார்கள். மற்றபடி இவர்களும் வெள்ளைக்காரர்களும் தவிர மற்றவர்கள் எல்லாரும் அதாவது பார்ப்பனரல்லாதவர்கள் எல்லோரும் வகுப்புவாதிகள் ஆவார்கள். எனவே இந்த வகுப்புவாதிகளை அழிப்

பதற்கு காங்கிரஸ்வாதிகளும்தமிழ் மாகாண காங்கிரஸ் வாதிகள் என்ன வேண்டுமானா லும் செய்யலாம் என்று மதுரையில் கூடிய தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத் தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றிக்கொண்டி ப்பதோடு எல்லா இந்தியகாங்கிரஸ் கமிட்டி யாலும் அதிகாரம் பெறப்போகின்றார்க ளாம். தமிழ் மாகாணக்கமிட்டியில் நிறைவே றி விட்டால் பிறகு எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஆக்ஷேபிக்க யாருக்கு அதிகா ரம் இருக்கமுடியும்? ஏன் என்றால் அந் தந்த மாகாண நிலைமை அறிந்து நடந்து கொள்ள அந்தந்த மாகாணத்துக்காரருக் குத்தான் உரிமை இருக்கவேண்டுமே ஒழிய வேறு ஒருவர் அதில் பிரவேசிப்பது “மாகாண சுயாட்சிக்கு விரோதமான காரிய மாய்விடும்” என்பது அவர்களுக்குத்தெரி யும். இதற்கு உதாரணம் வேண்டுமானால் சென்ற தேர்தலின்போது நடந்த நடவடிக் கைகளே போதுமானது. அதாவது காங்கி ரஸ்காரர்கள் மந்திரிசபை அமைக்கக்கூடாது என்றும் மந்திரிகளை ஆதரிக்கக்கூடாது என் றும் இந்திய தேசியக் காங்கிரஸ் தீர்மானம் இருந்தும், சென்னை மாகாணத்தில் காங்கி ரசுக்காரர்கள் மந்திரி சபை அமைத்து மந்தி ரிகளுக்கு உதவியாயிருந்ததை தமிழ் மாகா ண நிலைமை உத்தேசித்து எல்லா இந்திய காங்கிரஸ் கமிட்டி ஒப்புக்கொண்டதோடு தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியும் சிறப்பாக காங்கிரஸ் தலைவரும் பாராட் டப்பட்டதே போதுமானது. அதுபோல வே தான் இப்போதும் மந்திரிசபையை அமைத்து மந்திரிகளை ஆதரிப்பது மாத்தி ரம் போதாது என்பதோடல்லாமல் வகுப்பு வாதிகளை அடியோடு அழிக்க அவசியமா னால் மந்திரிவேலையையும் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று வெகு கஷ்டமானதும் அதாவது வேப்பெண்ணெய் சாப்பிடுவது போன்ற “கசப்பானதும்” பெரிய “தியாகம்” செய்யவேண்டியதுமான காரியத்தையும் செய்து தீரவேண்டுமாய் தீர்மானம் செய்து கொண்டு இருக்கின்றார்கள். காங்கிரஸ்கா ரர்களின் “தன்னலமறுப்புக்கும் தியாகத்திற் கும்” இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்? என்பது நமக்கு விளங்கவில்லை. இதில் நாம் மகிழ்ச்சியடைவதென்னவென் றால் சர்க்காரை ஒழிக்கவோ தேசாபிமானத் திற்கோ மந்திரி வேலையை ஒப்புக்கொள்வதா யிருந்தால் அதுவேறு விஷயம். வகுப்புவாதி களாகிய பார்ப்பனரல்லாதார்களை அழிக்க மந்திரி வேலையை ஒப்புக்கொள்ளவேண்டும் என்றும், மற்றும் அதற்காக என்ன வேண்டு மானாலும் செய்யலாம் என்றும தீர்மானித் திருப்பதானது அதாவது, சர்க்காரும் தேச மும் பின்னால் பார்த்துக்கொள்ளுவோம் முதலில் இவர்களை ஒழிப்போம் என்று தீர் மானித்திருப்பதானது நமது கொள்கைக்கு பலத்தையும நமது செய்கைக்கு ஊக்கத்தை யும் கொடுக்கின்றது.

எப்படி என்றால் நாமும் இதைத்தான் சொல்லுகின்றோம். அதாவது, சர்க்காரை யும் தேசத்தையும் பிறகு பார்த்துக்கொள் ளலாம் சமூக வாதிகளை முதலில் அழிக்க வேண்டும் என்பதேயாகும். இந்த தேசம் பாழாய்ப்போவதற்கும் இந்த சர்க்கார் இங் கு இவ்வளவு அநீதியான ஆட்சிபுரிவதற்கும் சமத்துவக்கொள்கை பாவாதிருப்பதற்கும் எந்த சமூகத்தார் தங்கள் சமூக நன்மையை உத்தேசித்து எதிரிகளாய் இருக்கின்றார்க ளோ அந்த சமூகத்தார் முதலில் அழிக்கப் படவேண்டும் என்பதேயாகும். இதற்காக நாம் காங்கிரஸ்காரர்களைவிட ஒருபடி அதிக மாகக்கூட போகத் தயாராயிருக்கின்றோம். அதென்னவென்றால் மந்திரி வேலை ஒப்புக் கொள்ளுகின்ற கஷ்டம் மாத்திரமல்லாமல் கிடைக்குமானால் கவர்னர் வேலை ஒப்புக் கொள்ளுகின்ற அளவு தியாகம் செய்தா வது சமூக வாதத்தை அடியோடு ஒழிக்க ஆசைப்படுகின்றோம். எனவே எல்லா வகு ப்பாரும் சமமாய் இருக்கவேண்டும் எல்லா வகுப்புக்கும் சம சுதந்திரமும் சந்தர்ப்ப மும் அளிக்கவேண்டும் என்கின்ற வகுப்பு வாதம் ஒழியவேண்டும் என்கின்றவர்கள் பார்ப்பனர்களாகிய காங்கிரஸ் வாதிகளுக் கே ஓட்டுச் செய்யட்டும். ஒரு வகுப்பு உயர் வாகவும் ஒருவகுப்புத் தாழ்வாகவும் இருப் பதை எப்போதும் எந்த விதத்திலும் சட் டத்தின்மூலமும் மாற்றக்கூடாது என்கின்ற சமூக வாதம் ஒழிய வேண்டும் என்று கருதுகின்றவர்கள் பார்ப்பனரல்லாதாராகிய வகுப்பு வாதிகளு க்கு ஓட்டுக்கொடுங்கள் என்றுதான் நாம் கே ட்டுக்கொள்ளுகின்றோம். மற்றபடி சமூக வாதம் வகுப்புவாதம் இரண்டையும் விட்டு விட்டு தேசத்தையும் சுயராஜ்யத்தையும் விரும்பி யாராவது ஓட்டுச் செய்வதாயிருந் தால் அவர்கள் கக்ஷிகளைக் கவனிக்காமல் கொ ள்கைகளையும் திட்டங்களையும் அவைகளுக் காக அவரவர்கள் இதுவரை நடந்துகொண்டு வந்திருப்பதையும் நாணயத்தையும் கவனி த்து ஓட்டுச் செய்வதில் நமக்கு யாதொரு ஆக்ஷேபணையும் இல்லை. ஏனெனில் சமூக வாதிகளான பார்ப்பனர்களுடைய காங்கிர சும் “சுயராஜ்யம்” கேட்கின்றது.

வகுப்பு வாதிகளான பார்ப்பனரல்லாதா ருடைய ஜஸ்டிசும் “சுயராஜ்யம்” கேட்கின் றது. அவர்களும் “குடியேற்ற நாட்டு அந் தஸ்து” கேட்கின்றார்கள் இவர்களும் அதை யே கேட்கின்றார்கள்.

அவர்களும “இரட்டை ஆட்சி கூடாது” என்கிறார்கள். இவர்களும் “அது கூடாது” என்கிறார்கள். அவர்களும் “கதர் மதுவில க்கு தீண்டாமை” என்கின்றார்கள், இவர் களும் “தீண்டாமை மதுவிலக்கு கதர்” என் கின்றார்கள்”. அவர்களும் “சுயராஜ்யத் திட்டம்” தயாரித்து புஸ்தகங்கள் பத்திரி கைகள் மூலம் சைமனுக்கும் பார்லிமெண் டுக்கும் அனுப்பியிருக்கின்றார்கள். இவர் களும் நேரிலும் பத்திரிகைகள் மூலமும் சை மனுக்கும் பார்லிமெண்டுக்கும் அனுப்பி இருக்கின்றார்கள்.

ஆனால் சமுதாய விஷயத்திலும் சீர்திருத் த விஷயத்திலும் வகுப்புவாதம் சமூகவாதம் ஒழியும் விஷயத்திலும் சுயமரியாதை இயக் கத்தின் தத்துவங்களாகிய செங்கற்பட்டு தீர்மானங்களில அநேகத்தை வகுப்புவாதி கள் என்னும் பார்ப்பனரல்லாதாராகிய ஜஸ் டிஸ் கக்ஷிக்காரர்கள் ஒப்புக்கொள்ளுகின்றார் கள். ஆனால் வகுப்புவாதிகள் அல்லாதவர் களான காங்கிரஸ்காரர்கள் என்னும் சமூக வாதிகளான காங்கிரசுக்காரர்கள் ஒப்புக்கொ ள்ளாமல் அதை அடியோடு எதிர்த்து பிரசா ரம் செய்கின்றார்கள். இதுதான் வித்தியாச மாகும். ஆதலால் ஓட்டர்கள் கவனித்து தங்கள் இஷ்டப்படி நடக்க உரிமை உள்ள வர்கள் ஆவார்கள்.

தேர்தல் கவலை.

—o—

மூர்த்திக்கும்--வாசகருக்கும் சம்பாஷணை.

சித்திரபுத்திரன் எழுதுவது.

வாசகர்—என்ன மூர்த்தி, இந்த தடவை தேர்தலில் நமது ஜபம் செல்லாது போல் இருக்கின்றதே.

மூர்த்தி—எதனால் இவ்வளவு சந்தேகப் படுகின்றீர்கள்.

வா—எதனால் என்று கேட்கின்றீரே ஒவ்வொன்றும் நீ நேரில்பார்க்கவில்லையா? நாம் போகின்ற இடங்களில் எல்லாம் மீட்டி ங்கு போடக்கூட முடியாதபடி கலவரங்கள் நடக்கின்றதே; எவ்வளவோ கஷ்டப்பட்டு மிதவாதிகளிடம் இருந்த மேடையை நமது சுவாதீனம் செய்தோம். பிறகு அதை ஒத்து ழையாமைக் காரர்கள் வந்து பிடுங்கிக் கொண்டார்கள். அதற்கும் எவ்வளவோ பாடுபட்டு அவர்களையும் விரட்டி அடித்து அவர்களிடம் இருந்து சுவாதீனம் செய்து கொண்டோம். கடைசியாக அது ஜஸ்டிஸ் காரரிடம் கூட இல்லாமல் சுயமரியாதைக் காரரிடம் அல்லவா போய் விட்டது.

மூ—அதென்ன ஜஸ்டிஸ் காரரிடம் கூட இல்லாமல் என்று அவர்களுக்காக வருத்தப் படுகின்றவர் போல் பேசுகின்றீர்களே.

வா—ஜஸ்டிஸ் காரரிடம் போகாததால் எனக்கு வருத்தமில்லை. ஜஸ்டிஸ் காரரிடம் இருந்தால் நாம் அவர்களை சுலபத்தில் விரட் டி அடித்துப் பிடுங்கிக் கொள்ளலாம். ஏனெ ன்றால் அவர்களும் நம்மைப் போலவே ஓட் டர்களிடம் போய் பொய்யும் புளுகும் அடி த்து ஓட்டுப்பெற முயற்சிக்கின்றவர்கள் ஆதலால் நாம் கொஞ்சம் அதிக கூலி ஆள் வைத்து விரட்டினால் மேடையை விட்டு விட்டு ஓடி விடுவார்கள். சுயமரியாதைக்கா ருக்கு ஒரு கவலையுமில்லை. ஒருவர் தயவும் வேண்டியதில்லை. உள்ளதை உள்ளபடி கூப் பாடு போடுகின்றார்கள். அதனால் மேடைகள் எல்லாம் அவர்கள் வசமாய் விட்டன. அவர் களை விரட்டுவதென்றால் பெரிய கஷ்டமாயி ருக்கின்றது. எங்கு போனாலும் அவர்கள் தொல்லை நம்மை தலைகாட்ட விடாமல் செய் கின்றது பார்.

மூ—என்ன மகா பிரமாதம். திருச்சி, சேலம், கோயமுத்தூர், மதுரை இந்த ஜில் லாக்களில் தானே அவர்கள் ஜபம்செல்லும். மற்றபடி தஞ்சாவூர் நம்முடையது. அங்கு சில ஆட்கள் மாத்திரம கூப்பாடு போடுவார் களே ஒழிய மற்றபடி ஓட்டர்களை ஒன்றும் செய்துவிட முடியாது.

வா—என்ன சொன்னாலும் இந்ததடவை

எலக்ஷனில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நமக்கு பூஜ்ஜியம் தான் கிடைக்கும் போலிருக்கின்றது. வேண்டுமானால் கணக்கு சொல்லுகின்றேன் கேள். திருநெல்வேலியில் திரு செட்டியார் எப்படியும் வந்து விடுவார். மற்றொரு ஸ்தானம் யாராவது சைவப் பிள்ளைமார் தான் வர முடியும். எப்படியும் பிராமணன் வர முடியாது. அந்த சைவப் பிள்ளையும் நம்முடன் சேரமாட்டார். டவுன் தொகுதிக்கும் இந்த தடவை சாவடிப்பிள்ளை வருவது கஷ்டம். வந்தாலும் நமக்கு ஒன்றும் லாபமில்லை. ஆதலால் அந்த ஜில்லாவை மறந்து விட வேண்டியது தான்.

மூ—ராமநாதபுரம் ஜில்லாவோ ?

வா—அதுவும் அப்படித்தான். எப்படியும் திவான் பகதூர் முருகப்ப செட்டியார் வந்து விடுவார். திரு. அள. அரு. நாராயண செட்டியார் சந்தேகம். வந்தாலும் நமக்குப் பிரயோஜனப்படமாட்டார். திரு. டி. சி. சீ. ஆய்யங்கார் வருவது இந்த தடவை கஷ்டம் ஆகி விடும். நாட்டுக் கோட்டை செட்டியார் போட்டியில் எதாவது நமக்கு கிடைத்தால் தான் உண்டு. அவர்கள் எதாவது ராஜியாய்போய் விட்டால் நம்ம பாடு ஆபத்துதான். ஆதலால் அதையும் விட்டுவிட வேண்டியது தான்.

மூ—சரி அப்படியே வைத்துக் கொள்ளுவோம். மதுரை ஜில்லாவோ ?

வா—மதுரையை நினைக்காமலிருப்பதே மேலானது. ஏனென்றால் திரு. கே. ஆர். வெங்கிடராமய்யர் தான் மாத்திரம் இனிமேல் சட்டசபைக்கு நிற்பதில்லை என்று அல்ல தனதுபின் சந்ததிகளையும் நிற்கவேண்டாம் என்று திட்டம்செய்ய தீர்மானம் செய்துகொண்டார். சென்றதடவை நமது சி. பி. அவருக்கு பொய் நம்பிக்கை கொடுத்து எலக்ஷனில் 40, 50 ஆயிரம் ரூபாய் கடன் உண்டாக்கிவிட்டார். அது சூடு கண்ட பூனை ஆதலால் இனி தலை காட்டாது.

சேத்தூர் ஜமீன்தாரும் இந்த ஜில்லாவில் நிற்பதில்லை என்றுசொல்லிவிட்டாராம். எனவே திருவாளர்கள் பி. டி. ராஜனும், சௌந்திர பாண்டியனும், போடிநாயக்கனூர் செட்டியாரும் மாப்பிள்ளைகள்போல எதிரிகள்கூட இல்லாமல் வந்துவிடுவார்கள்போல் இருக்கின்றது. இதை நினைக்கும்போது என் வயிறு பற்றி எறிகின்றது. யாரையாவது போட்டிக்கு பெயருக்காவது நிறுத்தாவிட்டால் நமது யோக்கியதையே போய் விடும்போலிருக்கின்றது. ஆதலால் நாம் பணம் கொடுத்தால் கூட ஆள்களைக் காணோமே என்கின்ற கவலையில் இருக்கிறேன்.

மூ—சரி மதுரை டவுன் சீட்டு (Seat) ஒன்று இருக்கின்றதல்லவா அது நமது திரு. துளசிராமுக்குத் தானே. அதில் என்ன ஆக்ஷேபம்?

வா—அது அநியாயமாய்ப் போகின்றது, ஏன்? போய் விட்டது என்றே சொல்லலாம்.

மூ—ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்? அதில் கூடவா சந்தேகம்.

வா—அதில் சந்தேகம் ஒன்றும் இல்லை தீர்மானமே தான், நமது துளசிராம் நிற்கவே மாட்டார், நின்றாலும் அவர் வகையார்களே ஓட்டு செய்யமாட்டார்கள்.

மூ—ஏன் ஓட்டு செய்யமாட்டார்கள்?

வா—ஏன் என்று கேட்கின்றாய், அவர்கள் முன்போல் கண்மூடித்தனமாக இல்லை. இப்போது காரியம் தெரிந்து கொண்டார்கள் முக்கால்வாசிப்பேர்கள் திரு ஆர். எஸ். நாயுடுவுக்கே போடுவதாக இப்போதே தீர்மானம் செய்து கொண்டார்கள் என்பது அந்த வகைக்காரர்களாலேயே சொல்லத் தெரிந்து கொண்டேன். அந்த ஸ்தானம் கண்டிப்பாய் ஆர். எஸ். நாயுடுவுக்குத் தான். அதை விட்டு வேறே பேச்சுப் பேசு.

மூ—சரி அதுவும் தொலைந்து போகட்டும். திருச்சி ஜில்லாவோ ?

வா—அது மாத்திரம் என்ன வாழுமா? எப்படியும் திரு. நாராயணசாமிப் பிள்ளை வந்து விடுவார். நம்ம சேதுவுக்கு பதிலாக யாரையாவது போடலாம் என்றுதான் தோன்றுகின்றது. ஏன் என்றால் நம்மை ஏமாற்றிவிட்டார். ஆனால் வேறு யாரைப்போடுவது என்று பார்த்தால் எல்லாம் அவரைவிட மோசமான ஆள்களாகத் தான் இருக்கின்றார்கள். அன்றியும் வேறு ஒரு பிராமணனை நிறுத்தினால் இரண்டு பிராமணன் சண்டையில் ஒரு பிள்ளைக்கோ தேவருக்கோ செட்டிக்கோ போய்விட்டால் அது இதைவிட கேவலமாய்விடும் பிராமணன் என்கின்ற பெயருக்காவது ஒரு ஆள் இருக்கட்டும். அவர் வந்தாலாவது மறுபடியும் மந்திரியாக்கி மாதம் 4000ரூ. வாங்கிக்கொண்டு ஏதோ 4 பிராமணனுக்கு வேலை கொடுத்துக்கொண்டிருக்கட்டும். அவரை தொந்திரவு செய்யவேண்டாம். ஆனால் நம்ம கணக்கிலும் சேர்க்கவேண்டாம்.

மூ—சரி திருச்சி சீரங்கம் டவுன் சீட்டு இருக்கின்றதே அதைப்பற்றி என்ன சொல்லுகின்றீர்கள்.

வா—சரி அது கண்டிப்பாய் இப்போது இருக்கும் திரு. டூ. ராமசாமி ஐய்யருக்கு கிடைக்காது. தவிரவும் முன்போல் இரண்டு பிராமணரல்லாதார் சண்டை போட்டுக் கொண்டால் மாத்திரம் ஒரு பிராமணனுக்கு கிடைக்கும். ஆனால் இந்த தடவை அவர்களுக்குள் சண்டை வராது என்றே நினைக்கின்றேன்.

மூ—சரி இனி நம்முடைய தஞ்சாவூரில் மூன்றும் நம்முடையதுதானே?

வா—சரிசரி நன்றாய்ச்சொன்னாய். மூன்றும் நம்முடையதென்று சொல்லுகின்றாய். மூன்றும் ஜஸ்டிஸ் கட்சிக்காரருக்கே போய் விட்டாலும் சரி அல்லது சுயமரியாதைக் கட்சிக்காரருக்கே போய்விட்டாலும் சரி. எப்படியாவது இந்த முத்தையா முதலியாருக்கு இல்லாமலிருந்தால் அதுவே பத்து ஸ்தானம் நமக்கு கிடைத்தது போலாகும்.

மூ—இந்த தடவை கண்டிப்பாய் அவருக்கு ஆகப்போவதில்லை. நீங்கள் ஏன் கவலைப்படுகின்றீர்கள். காரணம் சொல்லட்டுமா?

வா—நீ ஏன் அந்தக் கனவு காண்கின்றாய் உன்னுடைய காரணத்தைத்தான் சொல்லு பார்ப்போம்.

மூ—சொல்லுகின்றேன் கேளுங்கள்.

ஒன்று சுயமரியாதை கட்சியில் சேர்ந்தால் மடாதிபதிகள் உதவி செய்ய மாட்டார்கள்.

இரண்டு திருவாளர்கள் சாமியப்பா, பன்னீர்செல்வம் ஆகியவர்கள் முத்தையா முதலியாருக்கு விரோதிகள்.

மூன்று நம்முடைய ஆட்கள் கண்டிப்பாய் அவருக்கு ஓட்டு செய்யமாட்டார்கள். இந்த மூன்று முக்கிய காரணங்கள் தான்.

வா—இதுதானா பெரிய சங்கதியாய் கருதிவிட்டாய்.

மடாதிபதிகள் திரு. முதலியாரை சட்டசபைக்கு நிற்கும் படிக்கும் செலவும் போட்டுக்கொள்ளுவதாகவும் வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். நான் மடாதிபதிகளுக்கு என்ன என்னமோ சொல்லிப்பார்த்தேன். அவர்கள் அத்தனையும் கேட்டுக்கொண்டு கடைசியாக அதையெல்லாம்முதலியாரிடமும் சொல்லிவிட்டார்கள். அந்த மடாதிபதிகளுக்கு முத்தையா ரம்பவும்நம்பிக்கை உள்ளவர். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி மடாதிபதிகளுக்கு ஒன்றும் தகராறில்லை. அது எப்படியாவது பிராமணர்களைத்தான் ஒழிக்கக்கிளம்பி இருக்கின்றதே அல்லாமல் பிராமணரல்லாத மடாதிபதிகளுக்கு ஒன்றும் அதனால் ஆபத்தில்லை என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

சுயமரியாதைக்காரருக்கும், சைவர்களுக்கும் இருக்கும் தகராறெல்லாம் ஒன்றே ஒன்றுதானே. அதாவது கோவில்களுக்குள் எல்லோரையும் விடவேண்டும் என்பது. இதில் சைவ மடாதிபகள் யாருக்கும் தகராறு இருப்பதாய் தெரியவில்லை. சீக்கிரத்தில் அவர்கள் எல்லாம் ராஜியாய்ப்போய் நம் மீது திரும்பப்போகின்றார்கள். அதெல்லாம் முத்தையா முதலியார் இரண்டு பேருக்கும் தக்கபடி சொல்லி, கூடிய சீக்கிரத்தில் ஒரு விதத்தில் முடிவு செய்து விடுவார்.

அடுத்தபடியான திருவாளர்கள், பன்னீர்செல்வம் சாமியப்பா இவர்கள்விரோதம் ஒன்றும் நிலைக்காது. அதெல்லாம் வெளிக்குத்தானேயொழிய காரியத்தில் ஒருவருக்கொருவர் முட்டிக்கொள்ளமாட்டார்கள். தவிர திரு. சாமியப்பாவும் அசம்பளிக்கு நிற்பதாய்த் தெரிகின்றது. ஆதலால் அவர் விரோதத்திற்குப் போகமாட்டார். போனாலும் இருக்கிறவர்கள் விடமாட்டார்கள். எப்படியாவது இருவரையும் சரிப்படுத்தி விடுவார்கள். திரு. சாமியப்பாவை சரிக்கட்டிவிட்டால் திரு. பன்னீர்செல்வம் தகராறு இருக்கவே இருக்காது.

அன்றியும் திரு. முத்தையா சென்ற தேர்தலில் "சுதேசமித்திரனும்" மற்றும் சில பிராமணர்களும் உள்ளுக்குள் விரோதமாய் வேலை செய்தும் இந்த மாகாணத்திலேயே அதிகப்படியான ஓட்டுவாங்கினவர். பிராமணர்கள் வெகுபேர் இந்த தடவை அவருக்கு வெளிப்படையாகவே அனுகூலமாக வேலைசெய்வார்கள் என்று கூடத்தெரிகின்றது.

தவிர, அவரும் இந்த தேர்தலுக்கு முப்பது நாற்பது ஆயிரம் ரூபாய் எடுத்துவைத்து விட்டார். போதாக் குறைக்கு நாகப்பட்டணம் திரு. காயாரோகணமும் சட்டசபைக்

கு நின்று அவரோடு சேர்ந்து வேலைசெய்யப் போகின்றாராம். அவரும் முப்பது நாற்பது ரூபாய் ஆறு மாத வரும்படியை இப்போதே ஒதுக்கிவைத்துவிட்டாராம். இரண்டு பேரும் சேர்ந்து விட்டால் பிறகு சொல்லக் கூட வேண்டுமா? மூன்றாவது ஸ்தானம் தானாக வந்தால் வரட்டும் இல்லாவிட்டால் வேண்டியதில்லை என்று அவ்வளவு அலட்சியமாய் சொல்லுகின்றார்களாம். அப்படி அவர்கள் அலட்சியமாய் விட்டால்கூட நம்மில்யாருக்காவது வருமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. எனெனில் திரு. மருதவாணம் பிள்ளைக்கு ஒன்று நாம் விடவேண்டாமா? தவிர திரு.நாடி முத்துப்பிள்ளை ஆசைப்பட்டால் அவருக்கு விடவேண்டாமா? எப்படியாவது கஷ்டப்பட்டால் இந்த ஜில்லாவில் வேண்டுமானால் ஒரு ஸ்தானம் கிடைக்கலாம்.

மூ—அப்பாடா! இதுவரையில் ஐந்து ஜில்லாவுக்கு கணக்குப் போட்டதில் ஒரு ஸ்தானம் கிடைத்தது. மற்றபடி தென் ஆற்காடு ஜில்லாவோ?

வா—அதில் ஒன்று திரு. வேணுகோபால் நாயுடுவுக்கு கிடைக்கும். மற்றொன்று திரு. குமார ராஜா முத்தையா செட்டியாருக்கு கிடைக்கலாம் (ராஜாசர். அண்ணாமலையாரின் குமாரர்) மற்றொன்று திரு. சீதாராமரெட்டியாருக்காவது, மற்றும் வேறு ரெட்டியாருக்காவது கிடைக்குமே ஒழிய எந்தவிதத்திலும் இந்தத்தடவை பிராமணனுக்கு கிடைப்பதற்குமாத்திரம் இடமில்லை.

மூ—சரி அந்த ஜில்லாவிலும் உள்ளதும் போச்சுதா? தொலைந்து போகட்டும். வடஆற்காடு ஜில்லாவின் சங்கதி என்ன?

வா-அதுவும் அநேகமாய் அப்படித்தான் ஆகும். ஒன்று திரு. மாணிக்கவேலுக்கும், மற்றொன்று திரு கிருஷ்ணசாமி நாயுடுவுக்கும் உறுதி. மூன்றாவது ஸ்தானம் திருவாளர்கள். வெங்கிட்டரங்கமும் ஆதிநாராயண செட்டியாரும் சண்டை போட்டுக்கொள்ள வேண்டியதுதான். வெங்கிட்டரங்கம் தனக்கு வேண்டாமென்று சொல்லுகின்றாராம். ஆதிநாராயண செட்டியாரோ என்ன என்னமோ குள்ளநரி தந்திரம் செய்கின்றார். கடைசியில் எப்படியாகுமோ தெரியவில்லை. ஒரு சமயம் 100க்கு 25 பங்கு ஆதிநாராயணசெட்டியார் வந்தால் வரலாம், ஒரு சமயம் வன்னியகுல க்ஷத்திரியர்களுக்கும், நாயுடு க்ஷத்திரியர்களுக்கும் புத்தி வந்து ஒன்று சேர்ந்து செட்டியார் யோக்கியதை தெரிந்து கொண்டார்களானால் மற்றும் ஒரு படையாச்சியோ, நாயுடோ கடைசி பக்ஷம் முதலியாரோதான் வரக்கூடும். ஆனால் செட்டியார் வருவது கூட அவ்விரு சமூகத்திய முட்டாள்தனத்தைப் பொறுத்திருக்கிறது.

மூ—சரி! ஆதிநாராயண செட்டியார் வருவதைவிட வராமல் இருப்பதே மேல். ஏனென்றால், வந்துவிட்டால் அது வேண்டும், இது வேண்டும் மக்களுக்கு உத்தியோகம் வேண்டும் என்றும் மற்றும் பலவிதத்தில் நம்ம உயிரை வாங்கி விடுவார்.

வா—அப்படிச் சொல்லவேண்டாம். அவர் பார்ப்பனரல்லாதாரை பொய்யும் புளுகும் சொல்லி வைவதற்கும், விஷமப்பிரசாரம் செய்வதற்கும், பிறத்தியார் நம்பும்படி தந்திரமாய்ப் பேசுவதற்கும் அவர் நல்ல ஆசாமி தெரியுமா?

மூ—சரி தொலைந்து போகட்டும். வந்த காலத்து நல்லவரா கெட்டவரா பார்த்துக் கொள்ளலாம். செங்கற்பட்டு ஜில்லாவைப் பற்றி என்ன சொல்லுகின்றீர். அதிலுள்ள இரண்டு ஸ்தானமும் நம்முடையது தானே?

வா—சரியாய்ப் போய்விட்டது. முதலாவது திரு. முத்துரங்கமும் கிருஷ்ணசாமி நாயக்கரும் இந்தத் தடவை சட்டசபைக்கு நிற்பதில்லை என்று சொல்லி விட்டார்கள். வேறு ஆள் பிடிப்பது வெகு கஷ்டமாயிருக்கிறது. ஆனாலும் சூணாம்பேட்டைக்கும், அப்பாசாமிக்கும் இருக்கும் விரோதத்தினால் யாரையாவது போடவேண்டுமென்று சூணாம்பேட்டைக்கு ஆத்திரம் மாத்திரம் இருக்கின்றது. நிற்பதற்குத்தான் ஆட்களைக் காணோம். அவைகள் அநேகமாய் ஒன்று திரு. வேதாசலத்திற்கும் மற்றொன்று திரு. ஜெயராம் நாயுடுவுக்காவது அல்லது வேறு ஒரு ரெட்டியாருக்காவதுதான் போய் விடும். அதை நம்புவதில் பிரயோஜனமே இல்லை.

மூ—சரி நம்முடைய மதராஸ் 4 ஸ்தானங்கள் இருக்கின்றதே அவை நான்கும் நம்முடையதுதானே?

வா—நான்குக்கும் நமக்காக நிற்பதற்கு ஆள்கள் எங்கே முதலில் சொல்போர்ப்போம். முதலாவது திருவாளர்கள். கோவிந்தராஜூ முதலியார் பெயரையும், பக்தவத்சலத்தின் பெயரையும் சென்னை ஓட்டர்களிடம் சொன்னால் அடிதான் கிடைக்கும். அவர்கள் யோக்கியத்தை ஓட்டர்களுக்கு அவ்வளவு தூரம் தெரிந்து போய்விட்டது. திரு. மல்லையாவையோ பிராமணன் என்கிற முறையால் தள்ளிவிடுவார்கள். ஒரு சமயம் திரு. சாமி. வெங்கிடாசலத்திற்குக் கிடைத்தால் கிடைக்கலாம். ஆனால் அவரே அந்த தொகுதியில் நிற்க பயந்துகொண்டு வேறு தொகுதிக்கு நிற்கப் பிரயத்தனப்படுவதாய்த் தெரிகிறது. அவர் நின்று ஜெயித்தாலும் முன்போல நமக்கு உதவியாய் இருக்கமாட்டார். நமக்கு தலையும், ஜஸ்டிஸ் கக்ஷிக்கு வாலையும் காட்டிக்கொண்டிருக்கிறார். ஆதலால் அதை நம்புவதில் பயனில்லை.

மூ—ஜஸ்டிஸ் கக்ஷியில் யார்தான் நிற்பார்கள்.

வா—திரு. டாக்டர் சி. நடேசமுதலியார் இஷ்டப்படி அவர் யாரை நிறுத்துகின்றாரோ அவருக்குத்தான் ஆகக்கூடும். கொஞ்சம் நஞ்சம் நமக்கு இருந்த நம்பிக்கையும் "ஆஸ்திக" சங்ககாலிகளால் கெட்டுப்போய் விட்டது. அன்றியும் அதனால் நமது யோக்கியதையும் வெளியாய் விட்டது. இதனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்கள் தங்கள் பெருமையைச்சொல்லிக்கொண்டுகூட ஓட்டுக்கேட்க வேண்டியதில்லை. நம்ம யோக்கியதையையும் காங்கிரஸ் யோக்கியதையையும் சொல்லிக் கேட்டாலே அவர்களுக்கு கண்டிப்பாய் ஜெயம் கிடைத்துவிடும்.

மூ—சரி சேலம் ஜில்லா என்ன ஆகும்.

வா—ஒன்று திரு. எல்லப்ப செட்டியாருக்கு கிடைத்துவிடும். மற்றொன்று டாக்டர் சுப்பராயனுக்குக் கிடைக்கும்.

மூ—ஏன் திரு. ராஜகோபாலாச்சாரி நிற்கக்கூடாதோ?

வா—நிற்கலாம். அவருக்கும் ஆசைதான்; ஆனால் திரு. வரதராஜுலு ஒரு பக்கம் உபத்திரவம் செய்கின்றார். என்னவென்றால் ராஜகோபாலாச்சாரி நின்றால் தானும் நிற்பேன் என்று சொல்லுகின்றாராம். ஆதலால், ராஜகோபாலாச்சாரி தனக்கு வேண்டாம் என்பதுபோல் பேசுகிறார். ஆனாலும் ஜில்லா முழுதும் இதற்காகத்தான் மதுவிலக்கின்பேரால் சுற்றுகின்றார். கடைசியாக அவர் நின்றாலும் ஒன்றும் ஆகப்போவதில்லை. மேற்கண்ட இருவரும் தான் வருவார்கள். ஒரு சமயம் டாக்டர் சுப்பராயன் நிற்கவில்லையானால் திரு. ராஜமாணிக்க பண்டாரத்திற்காவது, தருமபுரி செட்டியாருக்காவது ஆகும்.

மூ—கோயமுத்தூர் ஜில்லாவோ?

வா—அதுவும் அப்படித்தான். ஒரு கவுண்டர், ஒரு முதலியார், ஒரு செட்டியார் வருவார்கள்.

மூ—ஏன் நாயுடுமார் வரமாட்டார்களோ?

வா—ஒரு சமயம் அவர்களிலும் யாராவது ஒருவர் வந்தாலும் வரலாம். ஆனாலும் எந்தவிதத்திலும் திரு. வெங்கிட்டரமணய்யங்கார் மாத்திரம் வரமாட்டார் என்பது உறுதி.

மூ—அப்படியானால் அங்கு யாரோ வந்துவிட்டுப்போகட்டும். நமக்குக் கவலையில்லை. ஏனென்றால் அய்யங்காரைத்தவிர யார் வந்தாலும் நம்முடன் சேரப்போவதில்லை.

வா—இதுதான் பொதுத் தொகுதியின் நிலை. இனி கிறிஸ்தவத் தொகுதியில் நம்ம குழந்தை வந்தால்தான் நமக்கு உதவும். ஆனால் அவருக்கு கட்டினபணம்கூட வராது. மற்றபடி யார் வந்தாலும் திரு ஆரோக்கியசாமி வந்தாலும் நமக்குப்பயன் இல்லை. மகம்மதியர்களிலும் ஜனாப்புகள் ஹாபிமகமது, அமீத்கான் பஷீர் அகமது ஆகிய இந்த மூன்றே மூன்று கனவான்களைத்தவிர வேறு யார் வந்தாலும் பயன்படாதென்றே சொல்லலாம். ஆனால் இந்த மூன்று பேரும் வருவது கஷ்டமான வேலை. ஏனென்றால் ஜனாப். ஜமால்மகம்மது விஷயத்தில் நாம் நடந்துகொண்ட மாதிரி அப்படிச் செய்து விட்டது. மீதி உள்ளது ஜமீன்தார் தொகுதி. இந்தத் தடவை ஒரு ஜமீன்தாராவது நமக்கு அனுகூலமாய் நிற்கிறவர்களைக்காணோம். எந்தவிதத்திலும் நமக்கு சிறிதும் நம்பிக்கை இல்லை என்பது மாத்திரம் உறுதி. மற்ற தொகுதிகளைப் பற்றியும் இந்திய சட்டசபையைப் பற்றியும் மற்றொரு சமயம் பேசலாம்.

எதற்கும் இந்த தேர்தலுக்கு சுயமரியாதை இயக்கத்தையும், கடவுளையும், மதத்தையும், கோவிலையுமே பிடித்துக் கொள்ளுவோம். வேறு வழி ஒன்றையும் காணோம் ஆதலால், நம்ம ஆட்களை யெல்லாம் இனிமேல் இதைப் பற்றியே பேசச்சொல்லு.

மூ—சரி அப்படியே ஆகட்டும்.

ஆஸ்திகத்தை நிலைநிறுத்த சித்தாந்தத்தில் நுழைந்த

திரு. கோ. வடிவேலு செட்டியார் அவர்களே!

தாங்கள் யாவர்க்கும் இதுகாறும் அறிவே கடவுள் என்றும், அவ்வறிவின் லட்சணமே 'தான்' என்றும், தன்னை யுணர்தலே மோட்சம் என்றும், பாகியத்தில் காணப்படும் பொருள்கள் யாவும் நாசமுடையன என்றும், அறிவான 'தான்' மாத்திரம் நித்தியம் என்றும், பலர்க்கும், பாடமூலமாகவும், பிரசங்க மூலமாகவும் சொல்லி வந்த நீவிர் தற்போது வெளியில் உள்ள சின்னங்களாகிய கற்களே கடவுள் என்றும், புராணங்களில் கூறியுள்ள விடயங்கள் உண்மையே என்றும் பேச முன் வந்த காரணம் யாதோ.

புராண கர்த்தாகிய வியாசர்—புராணங்களைப் பொய் என்று அக்காலத்தில் கூறியிருந்தவர்—இக்காலத்தில் உம்மிடமும், உமது சீடர்களிடமும், திரு கலியாண சுந்தர முதலியாரிடமும் நேரில் வந்து புராணம் மெய்தான் என்று உங்களுக்குச் சொல்லி, அதை அவர் வைப்பாட்டி பிள்ளையாகிய விதுரன் என்பவனின் பேரப்பிள்ளைகளாகிய நீங்கள் இராவணன் வம்சத்தவர்களாகிய தமிழர்களுக்கு சொல்லியும் பேப்பர்களில் எழுதியும் வரவேண்டுமெனக் கட்டளை விதித்தனரோ? அன்றி வியாசரின் பேரப்பிள்ளைகளாகிய செம்படத்தியின் வம்சத்தில் வந்த கனம் எஸ். சீனிவாச ஐயங்கார், சத்தியமூர்த்தி முதலானவர்களின் மூலமாக உங்களுக்குச் சொல்லி, உலகில் உங்கள் மூலமாய் கடவுளையும் அவர்களின் வீடுகளாகிய ஆலயங்களையும், கடவுளின் சுகசாதனங்களாகிய தாசிகளையும், அவர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும் வயிற்றுப்பிழைப்புக்கு இடமாயுள்ள கற்களாகிய சிலைகளையும் காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டாரோ என்பது புலப்படவில்லை.

நீர் கூறும் பிரசங்கங்களிலும், பாடங்களிலும், இராமருக்கு வசிட்டர் கூறிய வாசிட்டத்தில் கூறும் கதைகள் யாவும் மானசீக கதைகளெனவும், வசிட்டர் இராமருக்கு நல்ல அறிவை விளக்குவான் வேண்டியே வாசிட்டக் கதைகளைக் கற்பித்தார் என்றும் கூறும் நீர், அக்கதைகளை உண்மை என்று இப்பொழுது கூற முன் வந்தது உங்களின் அறிவின் உன்மத்தமா அல்லது பார்ப்பனர்களால் வயிறு வளர்க்க பணந்தேடும் வியாபாரமா என்பது விளங்கவில்லை. சந்தேகத்தை விளக்குவீரா?

சுமார் 17 வருடங்களுக்கு முன் நீர் சைவத்தையும் வைஷ்ணவத்தையும் (அதாவது கோவில் பூசை ஆண்டான் அடிமை வழிபாடு ஆகிய இவைகளைக்) கண்டித்து பிரசங்க மூலமாயும் புஸ்தக மூலமாயும் வாதம் செய்தவரல்லவா? இன்று மாறிய காரணம் யாது?

ரிபு கீதை தான் சரியான சரித்திரம் என்று கூறி புஸ்தகமும் அச்சடித்து விற்று வரும் நீர் (வேதாந்தத்திற்கு மாறாக) பணத்தின் ஆசையால் பைத்தியங்கொண்டு முன் பின் யோசியாது பொய்க்கதைகளை நிலைநாட்டத் தலைப்பட்டீரோ அல்லது சாகுங் காலத்தில் வேதாந்தம் பொய் சித்தாந்தம் தான் மெய் என்று உணர்ந்து உலகிற்குப் போதிக்க முற்பட்டீரோ அன்றி ஸ்ரீமான் எஸ். சீனிவாச ஐயங்கார் உங்களை இப்படிப் பேசச் சொன்னாரோ என்பது ஒன்றும் விளங்கவில்லையே?

1910ல் திருநெல்வேலியில் கருணானந்த சாமியாரால் கூட்டப்பட்ட சாது மகாகூட்டத்திற்குப் போய்த் திரும்பி வந்த நீர், உடனே சென்னையில் வேதாந்த மகாநாடு கூட்டவேண்டும், திருநெல்வேலி மகாநாடு சைவ மகாநாடு, அது ஒரு சார்பைச்சேர்ந்த மகாநாடு, பொது ஜனங்களுக்குப் பயன்படாத சாதிமதக் கட்டுப்பாடுடைய மகாநாடு, அது கண்டிக்கத்தக்கது. ஆகையால் ஜாதிமத வித்தியாசம் இல்லாத வேதாந்த மகாநாட்டை நாம் நடத்திப் பொதுமக்களுக்கு அறிவைப்பெருக்கவேண்டுமென்று கூறி ஆனந்தாஸ்ரம சாதுமகா சங்கம் ஒன்று சென்னை சூளையில் ஏற்படுத்தினீரல்லவா?

சிந்தாதரிப் பேட்டையில் நவீனமாய்ச் சாது சங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதை இப்போது நடத்தி வருகின்றீரல்லவா? அந்த சபையில் வசூலாகும் பணம் போதாதெனக்கருதி தற்காலம் ஆஸ்திக சங்கதில் நுழைந்து இருந்து மக்களிடம் செல்வாக்கைப்பெற்று பணம் தேடக்கிளம்பினீர்களா? அல்லது வேறு காரணம் கூறுகின்றீர்களா?

தாங்கள் உபந்நியாசமேடைகளில் "சீதை என் தாய், இராமர் என் தந்தை, அவர்களைக் குறை கூறினால் என் மனம் தாளுமா" என்கிறீர்? அப்படி தாய் தகப்பன் என்றால் அவர்களின் பிள்ளையாகிய நீரும் கடவுள் தானோ? உம்மையும் கடவுளாக எந்த மக்கள் உலகில் உம்மை வணங்குகின்றார்கள்?

சீதையாகிய உம் தாயைக் குறைகூறுகின்றார்கள் என்று கூறுகின்றீர்கள் உம் தாய் மேல் யார் குறை கூறுகின்றார்கள்? எங்கிருந்து எழுதப்படுகின்றது? என்ன குறை கூறுகின்றார்கள்? என்பதை யுணர்ந்து அதற்குத் தக்க பதில் கூறினீர்களா? அல்லது சுயமரியாதைக்காரர்களாகிய தமிழர்கள் கூறுவது சாத்திரத்தில் இல்லை என்று ஆரிய "சூத்திரர்"களாகிய நீங்கள் நிரூபித்தீர்களா? தவிர,

இராமாயணத்துக்குத் தத்துவார்த்தங்கள் கூறி வரும் நீங்கள் அது சமயம் இராமாயணத்தைப் பொய் என்று சொல்லுகிறீர்களே அது மாத்திரம் பொருத்தம்போலும்! நீங்கள் சொல்லுவது போல் சுயமரியாதைக்காரர்கள் இராமாயணம் பொய்என்று சொல்லவில்லையே, கதையை மெய்யாக வைத்துத் தானே கூறுகின்றார்கள். ஆனால் அதிலுள்ள பொருத்தமற்ற விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றார்களே யொழிய உங்களைப் போல் ஒரு சமயம் யாவும் பொய் என்றும் மற்றொருசமயம் மெய் என்றும் சமயத்துக்குத் தகுந்தபடி கூறவில்லையே.

உலகமுதல் யாவும் இல்லவே இல்லை, மூன்று காலத்திலும் உலகம் பொய் என்று சொல்லும் நீங்கள் ஆஸ்திகர் ஆகி விட்டீர்களே! இதிகாசங்களைமெய் என்றொப்புக் கொண்டு அதிலுள்ள ஆபாசங்களையும் மனித அறிவை நாசப்படுத்தக்கூடிய அச்சங்களையும் சாதி வித்தியாசங்களைக் கற்பித்து மக்களைப் படுகுழியில் தள்ளுவதாகிய ஒரு வகுப்பாரின் வயிற்றுப் பிழைப்புச் சூழ்ச்சிகளையும் களைய வேண்டும் என்று கூறுபவர்கள் நாஸ்திகர்களாய் விடுவார்களா? இதை உலகம் அறியாதா?

திரு செட்டியார் அவர்களே! ஆழ்ந்து யோசியுங்கள். உங்கள் தத்துவத்தையும் நியாயப்பிரகாசிகையையும், விசார சாகரத்தையும் எங்கு கட்டி வைத்துவிட்டுப் புறப்பட்டீர்கள்? மீண்டும் திரும்பிப் போய் அதைத் தேடிப் பாருங்கள்.

இராமனை விஷ்ணுவென்று நீங்கள் சொல்லுவது ஒருஆச்சரியமல்லவே தசரதனுக்குப் பிறகு இராமனை எம்பெருமானானார். அவர் உலகமக்களை இரட்சிக்கும் தொழிலை மேற்கொண்ட காரணத்தால் உலகம் அவரை இரட்சகன் என்று அக்காலத்தில் கூறிற்று. உங்கள் சாத்திரங்களும் அரசர்களை அதாவது மக்களைக் காப்பவரை விஷ்ணு என்று சொல்லவில்லையா? உலகத்தின் ஒரு பாகத்தை காத்துரட்சித்தும், ஆரியர்களால் நடத்தப்பட்ட உயிர்க் கொலைகளை நீக்கி சகல ஜீவப் பிராணிகளையும் காத்து வந்த ராவணனும் விஷ்ணுவல்லவா?

இன்னும் கூடத் தங்கள் தங்கள்குடும்பத்திலுள்ளவர்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றும்காரணத்தால் தங்களைக் குடும்ப ரட்சகன்என்றும விஷ்ணு என்றும்அழைக்க மாட்டார்களா? ஆதலால் இராமனை ரட்சகன் என்றும் விஷ்ணு என்றும் எழுதி வைத்ததிலும் தாங்கள் கூறுவதிலும் என்ன ஆச்சரியம் என்பது விளங்கவில்லையே.

தமிழராய்ப் பிறந்த நீர் தமிழ்த் தலைவனை, தெலுங்கை உற்பத்தி செய்த தயாளுவானவனும், அகிம்சா தர்மத்தைசிரமேற் கொண்டவனும், பெண்களை சமநிலையில் மதித்த புண்ணிய புருடனாகிய இராவணனை இராட்சதனென்றும, கொடியவனென்றும் கூறுவதும் தவிர, ஆரிய நீதிகளை (பார்ப்பார உயர்வுகளைப் பேசி அவர்களின் செல்வாக்கை நிலை நிறுத்த ஏற்பட்ட விதிகளை) பேசவும் எழுதவும் முற்பட்ட காரணம் அவ்வாரிய சாத்திரங்களையே படித்து அச்சாத்திரங்களில் வல்லவர் என்ம நீர் நினைக்கும்எண்ணமல்லவா? என்பதை யோசித்துப் பாரும்.

இனியாவது உம்முடைய தமிழ் மதம் யாது என்பதை விசாரித்து உமது தமிழ்த் தலைவனாகிய இராவணனைக் குறை கூறுவதினின்றும் நீங்கி ஆரிய வேதத்தை நம்பினால் தான் மோட்சம் என்று கூறும் பொருத்தமற்ற ஆஸ்திக மதத்தைக் களைந்து தமிழ் தெலுங்கு மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பொது மக்களாகிய சகலர்களின் அறிவைப் பெருக்குவதற்காகவும் உயிர் உடலை விட்டுப் பிரியும் வரையிலும் பாடுபட முன்வருமாறு வேண்டுகிறேன்.

உமது நண்பனும்
உம்முடன் உழைத்தவனுமாகிய
மே. மாசிலாமணி முதலியார்

(6ம் பக்கத் தொடர்ச்சி.)

கிரீடம், மாகதிமாலை, தங்கப்பல்லக்கு, வெல்வெட்டு சரிகை மெத்தை, திண்டு தலையணை, வைப்பாட்டி, படுக்கை அறை, ஆகியதுகளில் செலவு செய்துகொண்டிருக்கவேண்டியது அவசியமா என்று கேட்கின்றேன்.

இந்தமாதிரி வயிறெரிந்தயாராவது எடுத்துக்காட்டினால் அவர்களைப் பார்த்து பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் வெகு சுலபத்தில் நாஸ்திகர்கள் என்று ஒருவார்த்தையில் சொல்லி மக்களை ஏமாற்றி விடுவார்கள். எனக்கு அதைப்பற்றி கடுகளவுகூட பயமில்லை. இப்படிச்சொல்லுவது நாஸ்திகமானால் தூக்குமேடையில் இருந்துகொண்டுகூடநான்நாஸ்திகன்தான் அதுவும் நல்ல பரிசுத்தமான நாஸ்திகன்தான் என்று கூப்பாடு போட்டுச்சொல்லிக்கொள்ளத்தயாராயிருக்கின்றேன். என்னைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள். ஆனால்இப்படி ஒரு கூட்டம் கடவுள்பேரைச்சொல்லி வயிறு வளர்ப்பதன்மூலம் நாடும் நாட்டுமக்களும் மூடர்களாகிப் பாழாக இனனம்எத்தனை நாளைக்குப் பார்த்துகொண்டிருக்கப் போகின்றீர்கள் என்பதுதான் எனது கவலையும் சங்கடமுமாகும்.

இதுபோலவேதான் மதத்தைப்பற்றியும் நான் சொல்வதை சிலர் மதத்துரோகம் என்கின்றார்கள். பிறவியின் காரணமாக மனிதனுக்குமனிதன் ஒருநீதியும் ஆணுக்கு ஒருநீதியும்பெண்ணுக்கு ஒரு நீதியும் உள்ள எந்தமதமானலும்சரி அது 'கடவுளை நேரே கொண்டுவந்து காட்டி மோக்ஷத்திற்கு அழைத்துச் செல்லச் செய்யும் மதமாயிருந்தாலும் சரி அல்லது அது நம்மையே கடவுளாக்கும் மதமாயிருந்தாலும் சரி, அதை அழிக்கவேண்டியதும் அழிக்கமுடியாவிட்டாலும் அந்த அழிக்கும் வேலையில் உயிரைவிட வேண்டியதும் உண்மையான மனிதனது கடமை என்றுதான் நான் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றேன். இதில் சிறிதும் ஈஜக்கு இடமில்லை என்பதை கண்டிப்பாய் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அதுபோலவே காங்கிரஸ் என்பதும் தேசியம் என்பதும் சுயராஜ்யம் என்பதும் அசு கூட்டத்தாரின் சுயநலத்திற்கும் ஒரு கூட்டத்தாரின் வயிற்றுப் பிழைப்பிற்கும் ஏற்பட்டு நாட்டையும் ஏழை மக்களையும் பாழ்படுத்திவரும் தொல்லைகள் என்றே சொல்லுவேன். தேசத்தின் பேரைச்சொல்லிச் சத்தம்போடும் ஒவ்வொருவரும்சுயநலத்திற்கும்.சுஜாதிநலத்திற்கும் முறிவைத்துக்கொண்டு வேறு வழியில் பிழைக்க முடியாதவர்களைப்பிடித்து கூலிகொடுத்து கூப்பாடு போடச்சொல்லும் சூழ்ச்சியே தவிர வேறில்லை. சுயராஜ்யம் என்றால் என்ன என்று இதுவரை இவர்களில் யாராவது எடுத்துச்சொல்லி இருக்கிறார்களா? இவர்கள கேட்கும் சுயராஜ்ஜியத்தால் ஏழைகளுக்கும் தொழிலாளிகளுக்கும் குடியானவர்களுக்கும் ஏதாவது பலன் காட்டியிருக்கின்றார்களா? அல்லது இதுவரை போட்ட சுயராஜ்யக் கூப்பாட்டினால் ஏதாவது அவர்களுக்குபலன் உண்டாக்கி இருக்கின்றார்களா?

என்பதை நடுநிலையிலிருந்து யோசித்துப்பாருங்கள்.

எல்லா கூப்பாடுகளும் யாரை ஏமாற்றி யார் மந்திரியாவது? யார்உத்தியோகம்பெறுவது? யார் பணம் சம்பாதிப்பது? யார் யாரை அழிப்பது?என்பதைத் தவிர சர்க்காரைப்பற்றியோ ஏழை மக்களைப் பற்றியோ நாட்டின் கதியைப்பற்றியோ யாருக்காவது கடுகளவு கவலையுண்டு என்று யாராவது சொலலமுடியுமா என்று கேட்கின்றேன்.

ஆதலால் தான் இப்போது சிலர் வெகு பிரயாசையுடன் தங்கள் தங்கள் சுயநலத்திற்கும் கூலிப் பிழைப்பிற்குமாக காப்பாற்றமுற்பட்டிருக்கும் போலிக் கடவுள்களையும், கோவில்களையுமதங்களையும் சுயராஜ்யங்களையும் ஒழிக்கவேண்டும்என்று சொல்லுகின்றேனேஒழிய மற்றபடி என்சொந்தத்தில் மேற்கண்டவைகளிடம் எனக்கு யாதொரு வெறுப்பும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்பதாகப் பேசிவிட்டு மற்றும் சடங்குமோக்ஷம ஆகியவைகளைப்பற்றியும் விரிவாகப்பேசினர். ஒரு நிருபர்.

மதிப்புரை.

"பித்தன்"

இது சென்னை வனமலர்ச் சங்கத்தினின்றும் மாதந்தோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை. "வனமலர்ச்சங்கம்', என்பது 1924-ம் ஆண்டு திருச்சியில் ஆங்கிலமும் தமிழுங்கற்ற வாலிபர் சிலரால் நிறுவப்பட்டதாகும், சமரசம், புதிய முறையில் தமிழ் மொழி வளர்த்தல், கிராம முன்னேற்றம் முதலிய துறைகளில் பொதுஜன நன்மைக்கு உழைப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.இவற்றைப் பிரசாரம் செய்ய 'பித்தன்" வெளியிடப்படுகிறது. இதில் முற்போக்கு உணர்ச்சியுள்ளவர்களால் எழுதப்படும் கட்டுரைகளும், சிறு கதைகளும், புதிய பாட்டுக்களும் படிப்பவர்கட்கு விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. வருட சந்தா ரூ. 1—0—0.

மானேஜர்:— "பித்தன" ஆபீஸ்,
49 பஜார் ரோட், மயிலாப்பூர்,
சென்னை

சுகவழி 108.
உயிரும்--உடம்பும்.

கீழைச்சிவற்பட்டி திருவாளர் லெ. சோமசுந்திரன் அவர்களால் எழுதப்பட்ட சுகவழி 108, உயிரும்-உடம்பும் என்ற பெயருள்ள இரண்டு சிறு நூல்கள் வரப்பெற்றோம். இவற்றில் உயிருடலுக்குப் பயன்தரத்தக்க பல விஷயங்கள் அடங்கிக் கிடக்கின்றன. வேண்டுவோர் அரை அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்:—
லெ. சோமசுந்தரன்.
கீழைச்சிவற்பட்டி,
இராமநாதபுரம் ஜில்லா.

இந்திய சட்டசபை தேர்தல்.

ஜனுப் ஜமால் மகமதுக்கு மார்வாரி வர்த்தகர்களின் ஆதரவு.

சென்ற 14-௳ செவ்வாய்க்கிழமை மாலை சென்னை சைனுபஜார் ரோட்டு குஜாரத்தி சங்க மண்டபத்தில் குஜாராத்திகள், மார்வாரிகள், சிந்தியர்களடங்கிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரு. நாராயண தாஸ் கிர்தார் தாஸ் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு ஷை வகுப்பிலுள்ள பல பாங்கிக்காரர்களும் வியாபாரிகளும் வந்திருந்தனர்.

அடியிற்கண்டதீர்மானம் ஸ்ரீஸி. எம். கோதாரியால் பிரரேபிக்கப்பட்டு ஸ்ரீ ராமநாத கோயங்கா எம். எல். ஸி. அவர்களால்ஆமோதிக்கப்பட்டு ஸ்ரீ கால் சிங் மேதா முதலியோர்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

"அடுத்த இந்திய சட்டசபைத் தேர்தலில் சென்னை மாகாண வியாபாரத் தொகுதிக்கு ஒரு அபேட்சகராக நிற்கும் ஜனுப் ஜமால் மகமது சாஹிபு அவர்களை இக்கூட்டம் ஆதரிக்கவேண்டும் என்றும், இந்திய வர்த்தகத் தொகுதி வர்த்தகர்கள் அவருக்கு வியாபார அறிவும் அநுபவமும் இருக்கின்றமையின் அவர் தேசத்துக்கு ஊழியம் செய்யக்கூடுமாதலால் அவரையே ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கிறது." "திராவிடன்"

ஈரோடு வளையல்காரத் தெரு வாசகசாலை.

13—5—29 தேதி மாலை 6 மணிக்கு ஈரோடு வளையல்காரத்தெரு வாசகசாலையின் ஆதரவில் மதுரை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் திரு. கா. பத்மநாபநாயுடு தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. திருவாளர் மாரியப்பன் ஜனுப் சைஜலால் பி. ஏ. முதலியவர்கள் வாசகசாலையின் வளர்ச்சியைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் திரு. மாரியப்பன் அவர்கள் புத்தக நன்கொடையாளருக்கும் கோவாப்ரேட்டிவ் பாங்கியின் சார்பாக உதவி புரிவதாக வாக்களித்த திரு. வேங்கட்ட பெருமாள் அவர்கட்கும் நன்றி செலுத்திய பின் கூட்டம் முடிவுற்றது என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்,

ஒட்டு பழச்செடிகள்! புதிய விதைகள்!!

3 வருஷம் வயதுள்ள பலஜாதி ஒட்டுமாஞ் செடிகளும், எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை, கொய்யா, பப்பளிமாஸ், குமட்டி மாதுளை முதலிய ஒட்டு செடிகளும் அநேக தினுசு ரோஜா, குரோட்டன்ஸ், புஷ்பச்செடிகளும் இருக்கின்றன. சீமை காய்கறி புஷ்பவிதைகள் தனித்தனியே 24 தினுசு செட் 1-க்கு ரூ. 2—8—0, ஷை 12 தினுசு ரூ. 1—4—0, காட்டுக் காய்கறி விதை 24 தினுசு செட் 1க்கு ரூ 2—8—0, ஷை 12 தினுசு ரூ. 1—4—0, படங்களுடன் காட்லாக் இனும்.

R. சுந்தரேச முதலியார்,
சந்திரா நர்சரி, சேலம் ஜங்ஷன்.
(8) தந்தி விலாசம்:—"சந்திரா"

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாலும் நினைக்கக்கூடாத செயலைச் செய்தனனே இவனையும் இளையாழ்வார் என்று சிலர் போற்றுகின்றனரே! கம்பனுக்கு இவ்வாறு எழுதுவதால் இலக்குவனுக்கு மிகத் தீயபட்டம் கிடைக்குமென்று தெரியுமோ தெரியாதோ? தெரிந்தாலும் தனக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண்ணும் போகவேண்டும் என்று எண்ணும் புல்லியனைப்போல் கம்பன் இக்கதை கட்டினன் போலும்!

பின் சூர்ப்பணகை அங்கே வந்த இராமனிடம் தன்னை இலக்குவன் செய்த கேட்டைக் கூறியதாகவும் அவன் நடந்ததை ஊகித்தறிந்துகொண்டு தெரியாதவனைப்போலப் பாசங்கு செய்து அவளையும் இன்னாளெனத் அறியாததுபோல நடந்து தம்பியிடம் நடந்ததென்னென்ன வினவுகிறான். இது இராமனை நல்லவனாகக் காட்டக் கட்டிய கதையேனும் அவனையறியாமலே இராமனைத் தீயவனென உலகினர் அறியுமாறு பாடியிருக்கிறான். எவ்வாறெனில், சூர்ப்பணகையை முந்திய நாளில்தான் கண்டு நெடுநேரம் பேசிய இராமன் மறுநாட்காலையில் அவளை முன்பின் அறியாதவனைப்போல பாசாங்கு செய்கிறான். இவ்வாறு இராமனைப் பாசாங்குக்காரனென வாவது காட்டினனே கம்பன்? சூர்ப்பணகையைப் பற்றிக் கட்டிய புதுக்கதையாகிய அவள் உருக்குலைந்த பின்னும் பயத்தாலும், பாபத்தாலும் இராமனைச் சேர்த்துக்கொள்ள வேண்டினளென்ற கதை அறிவுக்கும், உலகியலுக்கும் பொருந்தாததாயுள்ளது. மேலும் அது கம்பனுடைய புன்மதியை நிலைநிறுத்துவதாகவும் உள்ளது. கடைசியில் இலக்குவன் சூர்ப்பணகையைக் கொல்லத் துணிந்து வேண்ட இராமனும் இசைகிறான் என்று கம்பன் கட்டிய கதையும் அவன் மனமாரப் பொய்த்ததால் அவன் மனம் அவனைச்சுட மெய்மறந்து எழுதியதாகவே உள்ளது. பெண் கொலை புரிவதில் இராமனும் இலக்குவனும் கைதேர்ந்தவரல்லரோ? அதனாலே இக்கொலைபாதகரிருவரும் அவளைக் கொல்லத் துணிகின்றனரென்று தன்னையறியாமலே கம்பன் கூறினன் போலும்! நிற்க, அதன் மேல் நடந்ததைப் பற்றிக் கம்பன் கூற்றைக் காண்போம்.

வால்மீகி பொதுவாக சீதை காரணமாகத் தன்னை உருக்குலைத்தனரெனச் சூர்ப்பணகை கரனிடம் கூறியதாகக் கூறக் கம்பன் தான் சீதையை இராவணனிடம் கொண்டு போமாறு தூக்கச் சென்ற போது உருக்குலைத்தனரெனக் கூறியதாக எழுதுகின்றான். கரன் போருக்குப் போன வழியில் பல தீய நிமித்தங்கள் தோன்றின, அவைகளை அவன் கவனிக்கவில்லை என்று மட்டும் வால்மீகி கூற, கம்பன் கரனை நோக்கி அவன் போர் தொடங்கும் எல்லையில் அகம்பனென்ற அறிவாளன் தீ நிமித்தங்களைக் கூறிப் போரிடாது தடுத்தனனெனக் கூறினன்.

முதலில் தூடணனும், பின் பன்னிரு தலைவரும், அதன் பின் திரிசிரசும் மடிந்தனரென வால்மீகி கூற கம்பன் முதலில் பதினால்கு (பன்னிருவரைப் பதினால்வரென்கின்றனன்) தலைவரும், பின் திரிசிரசும், அதன் பின்னரே தூடணனும் மடிந்தனரென மாற்றிக்கூறினன். தனது வில் முறிந்தவுடன் அகத்தியன் தந்த வில்லால் போரிட்டனனென வால்மீகி கூற, கம்பன் தனது கையிலிருந்த வில் முறிந்தவுடன் ராமன் நீட்ட வருணன் முன் தந்த வில்லைத் தந்தனனெனவும் அதனால் அவன் பொருதனனெனவும் புதுக்கதை கூறுகின்றனன்.

கடைசியில இராமன் பின் வாங்குமாறு கரன் ஓடி வந்ததைக் கம்பன் கூறவில்லை. இதைப்பற்றி மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் பக்கம் 72-ல "கரன் அவ்வளவு நெருங்கி வருவதை இராமன் எதிர் பார்த்து அதற்குத் தகுந்த உபாயம் செய்யாதிருந்தது ஜாக்கிரதைக் குறைவென்றே தோன்றுகிறது" என்றெழுதுகிறார். இச்செய்தியை மறைத்ததைப் போலவே இராமனிடம் முனிவர் கூறியதையும் சீதை அவனைப் பலர் காணத் தழுவியதையும் கம்பன் மறைத்தனன். இராமனுறியக்கிழுக்காவதை மறைப்பதைக் கம்பன் மறப்பதேயில்லை. இனி மேற் செல்லுதும்.

ஏல விற்பனை.

செங்கல்பட்டு முனிசிபல் கவுன்சிலைச் சேர்ந்த தண்ணீர் சர்பராச்சாலையில் இருந்த நீராவியினால் தண்ணீர் இறைக்கும் யந்திரங்களை நிம்மாவரத்தில் 1929 ௵ மே ௴ 24ந் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணிக்கு பகிரங்கமாக ஏலம் போடப்படும்.

(1) 8' – 6" x 3'—9" உள்ள செட்டாக்கு சொக்கிரேன் (Chcokirane) பாயிலர், ஒரு சதுரபாகத்திற்கு 100 பவுன் உச்ச சக்தியுள்ளதும் 8 குதிரை யோட்டமுள்ளது—2.

(2) 4 அங்குலம் பருமனுள்ள ஆகாஷணையும் 3 அங்குலம் பருமனுள்ள வெளியிடுதலையும் அடங்கிய படுத்தபடியுள்ள டுப்ளே (Duplox) நீராவியினால் நடத்தக்கூடிய நீரிறைக்கும வர்த்திங்டன் (wirthington) பம்புகள்—3

இது விஷயமான தகவல்களும் ஏல நிபந்தனைகளும் பெற அடியில் கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

M. Vethachalam.
அக்கிராசனதிபதி.

சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் மகாஜன சங்கம்.

19-4-29 தேதி திரு. எஸ். பி. பொன்னுசாமி முதலியாரவர்கள் தலைமையின் கீழ் மேற்படி சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சிதம்பரம், திரு. ராஜமாணிக்க முதலியாரும் திருவாளர்கள் எஸ் பழனியாண்டி முதலியார், நா. மாணிக்க முதலியார், பி. எஸ். சண்முக முதலியார், ஆர் சோமசுந்தா முதலியார், ஆர். சோமசுந்தர முதலியார், கே. எம் ராமலிங்க முதலியார், ராமசாமி நாயக்கர் (சோடா பேக்டரி) கே. மாரிமுத்து முதலியார் முதலியவர்கள் சமூகமுன்னேற்றம் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். கோவாப்பரேட்டிவ் சொசைட்டி ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டபின் கூட்டம் முடிவுற்றது என்று கே. எம். ஆர். தெரிவிக்கிறார்.

துறையூர் திருஞான சம்பந்தர் தமிழ் மறைக்கூடத்து ஆண்டுவிழா.

சுக்கில வருஷம் வைகாசி மாதம் 12-ம் தேதி மகிபாலன்பட்டி பண்டிதமணி உயர் திரு. மு. கதிரேசன செட்டியாரவர்கள் தலைமையின் கீழ் மேற்படி ஆண்டு விழா நடைபெறும் என்று திரு. டி. எம். பாலசுந்தரம் தெரிவிக்கிறார்.

பொங்கலூர் பாடசாலை க்ஷேமநிதிச் சீட்டு.

பொங்கலூர் கம்மகுலப் பிரமுகர்களான திருவாளர்கள், பெரியமுத்து நாயுடு, நா, வெங்கடசாமி நாயுடு, ஆகிய இரு கனவான்களின் பெருமுயற்சியால் பொங்கலூரில் 10000 ரூபாச் செலவில் பாடசாலைக்கட்டிடமும் 5000 ரூபாச் செலவில் ஆசிரியர்கட்கு ஆறு விடுதிகளும் அயலூர் மாணவர்கட்கு ஹாஸ்டலும் கட்டப்பட்டு சுமார் 9-ஆண்டுகளாக ஒழுங்காக ஒரு கமிட்டியின்மூலம் நடைபெற்றுவரும் உயர்தர எலிமெண்டரி கிரேட் பாடசாலையின் விசேஷ அபிவிருத்திக்காக ஒரு க்ஷேமநிதிச்சீட்டு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. கோவை ஜில்லாவில் பொறுப்வாய்ந்த கனவான்கள் அடங்கிய ஒரு கமிட்டிமூலம் இச்சீட்டு நடைபெறுகிறது, எல்லாரையும் ஆதரவளிக்குமாறு வேண்டுகிறோம்.

சீட்டின் விபரம்.

டிக்கட்டு ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் 22 டிக்கட்டுகள் அடங்கியது ஒரு புஸ்தகம். 4550 புஸ்தங்கட்கு ரூ. 100100 வசூல் செய்யவேண்டும். இதில் செலவு ரூ. 14100 போக மீதி ரூ. 86000 ல பாடசாலை நிதிக்கு ரூ. 43000 வைத்துக்கொண்டு மீதி ரூ. 43000 த்தை சீட்டுப்போட்டவர்களுக்குப் பின்வருமாறு பிரித்துக்கொடுக்கப்படும்.

1-வது பிரைஸ்		1	6000	6000
2	,,	1	3000	3000
3	,,	1	2500	2000
4	,,	1	2000	2000
5	,,	1	1000	1000
6	,,	2	500	1000
7	,,	4	250	1000
8	,,	5	200	1000
9	,,	10	100	1000
10	,,	20	50	1000
11	,,	30	25	750
12	,,	40	20	800
13	,,	200	10	200
14	,,	3990	5	19950
		4306		43000

ஒரு டிக்கட்டின் விலை ரூ. 1—0—0 22 டிக்கட்டுகளடங்கிய ஒரு புஸ்தகம் விற்றவர் ரூ. 20 சபைக்கு அனுப்பிவிட்டு 2 ரூ, கமிஷன் எடுத்துக்கொள்ளலாம் சீட்டு 1929-௵ ஆகஸ்டு ௴ 11 உ எடுக்கப்படும். மற்றவிபரங்கட்கு காரியதரிசிக்கு எழுதவும்.

காரியதரிசி
க்ஷேமநிதிச்சீட்டு ஆபீஸ்,
பொங்கலூர். (பல்லடம்வழி)

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

வனென்றும் பார்ப்பான் தவிர மற்றவன் கடவுளை யடையத்தவம் செய்தால் பார்ப்பான் செத்து அதர்மம் உலகத்தில் வந்துவிடுமென்றும் அதனால் அவன் தலையை வெட்டவேண்டுமென்றும் அப்படியே ராமன் வெட்டினனென்றும் ராமாயணத்திலிருக்கிறதா இல்லையா? அப்படி இருந்தால் அந்த ராமாயணத்திற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்? என்பதே இங்கு கேள்வி. சம்புகன் கதை இடைச்செருகல் அல்லவென்றும் மற்ற சமூகத்தார் சமயத்தின்பேரால் தங்களுக்கு அடிமைகளாக இருப்பதற்கே எழுதப்பட்டதென்றும் அதையே ஆதாரமாகக்கொண்டு அதையே நிலைநிறுத்த நாலாயிரப் பிரபந்தத்தில் ஆழ்வாரும் வடகலைக்கு ஆச்சாரியாரான வேதாந்த தேசிகரும் எடுத்தாண்ட ராமஸ்துதிகளும் இருக்கின்றனவென்பதையும் எடுத்துக்காட்டுகிறோம். அதற்குத்தகுந்த சமாதானம் சொல்லிவிட்டு எங்களைக் குற்றம் சொல்லும் பண்டிதர்கள் சுயமரியாதைக்காரர்களை அவர்கள் இஷ்டம்போல் தண்டிக்கட்டும்.

"செறிதவச்சம் புகன்றன்னைச் சென்றுகொன்று செழுமறையோ னுயிர்மீட்டு தவத்தோனீந்த நிறைமணிப்பூணணியுங் கொண்ட—ராமா"

இதுகுலசேகராழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழி 10-ம் திருமொழி 9-ம் பாட்டு. இவர் சேர ராஜ்யத்தின் அரசர். இவர் பன்னிரண்டு ஆழ்வார்களுள் ஒருவராதலினால் வைணவ ஆச்சாரிகளுக்கு முந்தினதே இவர்காலம். ராமாயணம் படிக்கக்கேட்ட இவர் ராமர் ராவணனிடம் சண்டைக்குப் போயிருக்கிறார் என்று படிக்கக்கேட்டவுடன் மந்திரிகள் தடுத்தும் தன் சைனியத்துடன் இலங்கைக்குப் போகப்புறப்பட்டுச் சமுத்திரம் வரையிலும் போய் திரும்பி வந்த இவர் ராமகைங்கரியம் செய்த பெருமையை இவர் சரித்திரம் கூறும்- ராவணனிடம் சண்டைக்கு ராமர்போயிருக்கிறார்என்று கதை படித்த உடனே இவர் சைனியத்துடன் ராமருக்கு உதவி செய்ய இலங்கைக்குப் புறப்பட்டு சமுத்திரம் கண்டு நல்லறிவு வந்து திரும்பியிருக்கையில் ராமர் தவஞ்செய்த சூத்திரனான சம்புகன் தலையை வெட்டிப் பார்ப்பானைக் காப்பாற்றின நீதியைவைத்துக் கொண்டு குலசேகர இந்த அரசரால், பார்ப்பானால் சூத்திரனென்று காட்டப்பட்ட எத்தனைபேர்தலைகள் வெட்டப்பட்டிருக்குமென்பதை நீங்களே ஆலோசித்துப்பாருங்கள். 1818 ம் வருஷத்துச் சட்டத்தைவிட இந்தச் சட்டம் எவ்வளவு கொடியது பாருங்கள்! அந்தக் கொடுமையான-தலையை வெட்டும் ராம நீதிச் சட்டம் நம் நாட்டில் இருந்தமையாலே சமயத்தின் உண்மை நமது ஜனங்களுக்குத் தெரியாமல் போய்விட்டது. பார்ப்பானே சமயமாகவும் கடவுள் பிரதிநிதியாகவும் விளங்கினான்.

வைஷ்ணவத்தில் வடகலையை உண்டு பண்ணிப் பார்ப்பானின் ஆதிக்கத்தை வற்புறுத்தினவர் வேதாந்த தேசிகர். இவர் பாதுகா சகஸ்திரம் என்று ராமருடைய பாதுகுறடைப்பற்றி ஆயிரம் பாட்டு ஸ்துதியாக வடமொழியில் பாடியிருக்கிறார். அதில் "ஏ பாதுகையே! ராமருடைய ராஜ்யத்தில் ஒரு அக்கிரமம் நடந்திருக்கிறது. அதாவது "சூத்திரன்" தவம் செய்ய பார்ப்பான் குழந்தை இறந்தது ஆனால் அது கூட உன் ராஜ்ஜியத்தில் நடக்கவில்லை. எல்லாச் "சூத்திரர்"களும் உங்களுக்கு அடிமைசெய்துகொண்டிருந்தார்களேயல்லாமல் ஒருவனாவது நாங்களில்லாமல் கடவுள் அடிசேரவேண்டுமென்று நினைக்கவேயில்லை" என்னும் சேதி, பாதுகை ராஜ்யபாரம் நடத்திய பதினான்கு வருடமுமிருந்ததாம்.

பெருமாளுக்குச்சமமான ஆழ்வாருக்கும்வைணவ ஆச்சாரிக்கும் சம்புகன் கதை இடைச்செருகல் என்றுபடவில்லை. அவர்களுக்கு முன்னே இந்தக்கதை ராமாயணத்திலிருக்கிறது. அந்த நாளிலிருந்து இங்கிலீஷ் நான் வந்தவரையிலும் இந்தக்கதை எத்தனைபேர் தலையை வெட்டி மனிதக் கழுத்திற்குச் சுருக்காகவிருந்திருக்கும். இன்னும் அந்தக்கதையின் வாசனை போகவில்லையே. "இடைச் செருக"லை எல்லாமெடுத்துவிட்டால் ராமாயணமெங்கேயிருக்கும்? இதற்கு நம் பண்டிதர்களின் பதிலைத்தெரிந்தவுடன் ராமாயணத்தில் பௌத்தன் கதை எவ்விதம் வந்தது? அதன் செருகல் எப்படி என்பதைக் கேட்போம்.

நன்கொடைகள்.

அடியிற் கண்டகனவான்கள் தங்கள் இல்லங்களில் நடைபெற்ற பார்ப்பனீயம் ஒழிந்த விசேஷ நிகழ்ச்சிகளை முன்னிட்டு "குடி அரசு" பத்திரிகைக்கு நன்கொடை அளித்துள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திருவாளர்கள்:—

சிலோன், பருத்தித்துறை, திரு. சு. வே. சதாசிவம் அவர்கள் மூலம் திரு. மு. உ. முருகேச பிள்ளை அவர்கள்	ரூ. 2-0-0
திருநெல்வேலி, காயாமலி பி. ஆர். ஆதித்தன்	ரூ. 2-0-0
சேரமாதேவி முத்துசாமி பண்டிதர்	ரூ. 1-0-0
கடம்பங்குளம் நாராயணத் தேவர்	ரூ. 1-0-0
நீடாமங்கலம் அ. வீராசாமி	ரூ. 0-8-0

பருகூர் ஆதிதிராவிட மகாநாடு.

5-5-29-ல் கிருஷ்ணகிரி தாலூகா பருகூர் கிராமத்தில் திரு. வி ஐ. முனிசாமி பிள்ளை எம். எல். சி அவர்கள் தலைமையின்கீழ் ஆதி மகாநாடு கூடிற்று. திரு. நஞ்சுண்டப்ப செட்டியார் கொடியேற்றினர். திருப்பத்தூர் உயர்திரு ஜி. சாமி நாயுடு திறப்புவிழா நிகழ்த்தினர். ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்தைப்பற்றியும் கல்வியைப்பற்றியும் பலர் பிரசங்கஞ் செய்தார்கள்.

மாட்சிமிக்க அரசர்பிரான் பிணிநீங்கி குணமடைந்ததுபற்றி மகிழ்ச்சியடைவதாயும், செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்களை முழுமனதோடு ஆதரிப்பதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் மகாநாடு இனிது முடிந்தது என்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

வையூர் மீனாட்சிபுரம் வாலிப நாடார் சங்கத் திறப்புவிழா.

விருதுநகரைச் சார்ந்த வையூர் மீனாட்சிபுரத்தில் நாளிது சுக்கில வருஷம் சித்திரை மாதம் 11ம் தேதி திரு. வி. க. பாலசுப்பிரமணிய நாடாரவர்களின் தலைமையின்கீழ் ஆதி சங்கவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. அப்போது "வாலிபர் கடமை" என்பதுபற்றி தூத்துக்குடி வெ. ஆ. மு. சோமசுந்தர நாடாரவர்கள் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். நிர்வாக அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டபின்னர் கூட்டம் இனிது முடிவுற்றது என்று "ஓர் நண்பன்" அறிவிக்கிறார்.

புதிய

வட்டிக் கணக்குப் புத்தகம்

இரண்டு வருடகாலம் இடைவிடா உழைப்பால், ராயவரம் காந்தி பாடசாலை தர்ம நிதியை உத்தேசித்து என்னால் கணித்து வெளியிடப்பெற்ற புதிய வட்டிக் கணக்குப் புத்தகங்கள் வாங்குபவர்கள் பலவித வட்டிக் கணக்குகளும் வெகு சுலபமாகப் பார்த்துக்கொள்ளலாம். இம்மாதிரி நூதன முறையில் இது வரை வெளியானதே கிடையாதென்பதை நேரில் பார்ப்பவர்கள் நன்கறிவார்கள். மேற்படி புத்தகங்கள் வாங்குபவர்கள் காந்தி பாடசாலை தர்ம நிதிக்கு உதவிய ஓர் நற்பலனையும் அடைகிறார்கள். இதன் விலை ரூ. 5—0—0.

ஐந்து புத்தகங்கள் ஏக காலத்தில் வாங்குபவர்களுக்கு தபால் சார்ஜ் இனாம்.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

சு. கதி. கதிரேசன் செட்டியார்.

புத்தகங்கள் கிடைக்கும் இடங்கள்.

சு. கதி. கதிரேசன் செட்டியார், மானேஜர் காந்தி பாடசாலை, ராயவரம், [புதுக்கோட்டை ஸ்டேட்.

சு. கதி. கதிரேசன் செட்டியார், மூவார்.

எங்கள விசேஷ குறைந்த விலை விற்பனை,

ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள்.

(4-h)



இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

வேதப்புரட்டை வெளியாக்கும்
"ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனாம். ஒரு புத்தகம் வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும். V. P. மூலம் அனுப்பினால் 14-அணா ஆகிறது.

திரு. சந்திரசேகரப்பாவலரால் எழுதப்பட்ட இராமாயணத்தின் ஆபாசம்

பாலகாண்டம்	விலை அணா 0—4—0
சுயமரியாதைப்பாடல்கள்	விலை அணா 0—2—0
இராமலிங்க சுவாமி பாடல்திரட்டு	விலை அணா 0—2—0

(f) விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.

இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கும்

சி. எம். சாமி

மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி இவற்றை தரவல்லது. எவ்வித பலஹீனம், தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120-குளிகைக்கு ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. வி. பி. சார்ஜ் வேறு.

குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு:

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி. 9 வித காசமும் அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 8.

நற்சாக்ஷி:—என் தாயாருக்கு ஏற்பட்ட இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம் கோளை, கபக்கட்டு இவைகளினால் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது தங்கள் குருதாளக பஸ்பம் கொடுத்ததில் பூரண குணமாயிற்று.

19—10—28 P, N. பழனிச்சாமி பிள்ளை,
நாட்டுமருந்து லைசென்ஸ்தார் அணாடுபிராசுதார், பழநி,

சந்திரோதித் தைலம்.

இதைத் தலை முழுகி வந்தால், கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுத்து, தலைநரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும். மூளைக் கொதிப்பு கண் ஒளிவு, முதலிய சகல வித மேக ரோகங்களையும் நீக்கும். புட்டி 1-க்கு ரூ. 5. அட்வான்ஸ் அனுப்பவேணும்.

கெற்ப எண்ணெய். இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்தா வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெற்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி 1-க்கு ரூ2. 0. 0.

பினாங்கு முதலிய அன்னிய தேச வாசிகள்ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

12-c **சித்த ஆயுள்வேத ஆசிரியர்**

C. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை,
பழநி, S.

சுயமரியாதைத் தொண்டன்.

இஃது

கடவுள் மதம் வேதம் புராண இதிகாசத்தின் பேராலும் அரசியலின் பேராலும் நமது நாட்டையும்சமூகத்தையும்பாழ்படுத்திவரும் ஜாதி வெறியர்களையும் சமய வெறியர்களையும் கூலிபிரசாரக் காலிகளாகிய ஆஸ்திக பூச்சாண்டிகளையும் தயவு தாட்சண்யமின்றிக் கண்டித்து மக்களுக்குச் சுயமரியாதை, சுதந்தரம், சமதர்மம், சகோதரத்துவம், பெண்கள் விடுதலை முதலிய முன்னேற்ற விஷயங்களை ஊட்டித்தட்டி எழுப்ப உதித்ததொண்டனுக்கு இன்றேசந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரியுங்கள்.

வருடசந்தா	3—0—0
வெளிநாட்டுக்கு	4—0—0

இதன் ஆசிரியர், இ. சாமிநாதன்

விலாசம்:—

மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்"
(f) பள்ளிபாளையம், (via) ஈரோடு.

கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்சில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் ஏரெப்ளேன் டிரேட் மார்க் உள்ளது ரூ1—8—0.

உடனே எழுதுங்கள்.

வாவலன் புஸ்தகசாலை
244, தங்கசாலை வீதி, மதராஸ்,

ரூ. 2—14—0 ரூ. 2—14—0

நூதன கை தையல் மெஷின்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 2—14—0.

கனடியன் வாட்சு பீபின்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
(4-d) ஜார்ஜ் டவுன், மதராஸ்.

சுயராஜ்யம் பெறுமுன் சுயமரியாதை வேண்டும்.

பொருள் செய்வகை.

1 உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு முதல் வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?
2 வாடிக்கைக்காரர்களைச் சேர்க்கும் விதம் அறிவீர்களா?
3 வியாபாரத்தில் எதெந்த காரணத்தால் எவ்வளவுபேர் நஷ்டமடைந்திருக்கிறார்களென்பது தெரியுமா?
4 வியாபாரத்தில் சித்தி அடையும் விதமென்ன?
5 புக்கீப்பிங் (கணக்கு வைக்குமுறை) ஒற்றைப்பதிவு இரட்டைப்பதிவு உங்களுக்குத் தெரியுமா?
6 துணிந்து செய்யும் வியாபாரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் எவை?
7 தினுசுகள் விலை ஏறுவதும், இறங்குவதும் முன்னால் அறியும் விதம் எப்படி?
8 கடை வைக்குமிடம் எது?
9 முதலில்லாமல் என்ன வியாபாரங்கள் செய்யலாம்?
10 நம்முடைய செயல் இன்னவை என்றும் ஈசுரச்செயல் இன்னவை என்றும் உங்களுக்குத் தெரியுமா?

இந்தமாதிரி நூற்றுக்கணக்கான நூதன விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம். இதன்விலை ரூபாய் ஒன்றுதான். விலாசம்:—

தேவி ஆஸ்ரமம், திரோபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA.



ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0.

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும், சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

(4) **கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி., மதராஸ்,**

நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

சுவாச காச ரோக நிவாரணி.

Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும், நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ, 2—8—0 அனுப்பவேண்டும்.

புரோப்ரைட்டர், ஐ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
18) அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0.
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.
டெலிபோன் 3311.
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

எங்கள விசேஷ குறைந்தவிலை விற்பனை.

இனாம்! இனாம்!!

முனையில் இரிடியம் உள்ள 14 Kt, தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினேன் வாட்சு கம்பெனி,
(4-f) மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞூ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும், தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதறாஸ்.

"முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி.
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
(f) 152, சிலிகிரோட், சிங்கப்பூர்.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.